R65ஶ211, N11VD
N78·18·9
186785

439

...ரலால்—முதல்தர வைர வியாபாரிகள்
...M. 916. 216, சைனுபஜார் ரோட், சென்னே.

ஸ்ரீ:

# வேதாந்த தீபிகை

ஸம்புடம் 18] விபவஞு—ஆனிமீ [ஸஞ்சிகை

18 OCT 1928



பத்ராதிபர்:—ஸ்ரீ. வாஸுதேவாசார்யர்.

வருஷ சந்தா ரூ 3.] *June 1928.* [ஸஞ்சிகை 1-க்கு அணு 6.

ஸ்ரீ:

# விஷய ஸூசிகை.


1. ஒரு விண்ணப்பம்—காரப்பங்காடு வித்வாந் ஸ்ரீ. உ.ப. வெங்கடாசார்ய ஸ்வாமி ... ... ... 237
2. பக்தி யோகம்:—வித்வான் தட்டை ஸ்ரீ. உ.ப. ஸ்ரீநிவாஸாசார்யஸ்வாமி ... 245
3. தர்ம கார்யங்களுக்காகப் போடப்படும் லாடேரி:— ... 249
4. விவாக வயது மசோதா:— ... ... ... 251
5. கடிதங்கள்:— ... ... ... ... 255
6. பத்ராதிபரின் குறிப்புகள்:— ... ... ... 259
7. ஸ்ரீ வேதார்த்த ஸங்க்ரஹம்:—ஸ்ரீ உ.ப. வாஸுதேவாசார்யர் ... 153
8. ஜிதந்தே ஸ்தோத்ரம்:—ஸ்ரீ. உ.ப. வித்வாந் புத்தங்கோட்டகம் ஸ்ரீநிவாஸாசார்யர் ... ... ... 57


---

## வேதாந்த தீபிகை.

*வேதாந்த தீபிகை பத்ரிகை சம்பந்தமான கடிதங்கள் ஸம்பாதகர் ஸ்ரீ வாஸுதேவாசார்யர் மாம்பலம், சைதாப்பேட்டை போஸ்டு என்ற விலாஸத்திற்கும்*

*மற்றக் கடிதங்கள் முதலியவை ஸ்ரீ லக்ஷ்மீநரஸிம்மா சார்யர், கார்ய தர்சி, ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ஸபை, திருவல்லிக்கேணி சென்னை என்ற விலாஸத்திற்கும் அனுப்பப்பட வேண்டும்.*


மெடல்கள் பெற்றதும், ரிஜிஸ்டர் நெ. 329, உன்னதமான, எப்பொழுதும்

**C. B. S. ராவின் சர்பத்துகளையே**

உபயோகியுங்கள்.

குளிர்ச்சியையும், மகிழ்ச்சியையும் உண்டாக்கக்கூடியது. உண்மையானது. உத்திரவாதமுள்ளது.

| | | |
|---|---|---|
| நன்னாரிவேர் புட்டி ரூ. 1—8 | லெமன் ,, ,, 1—8 | பாதாமி ரூபா |
| அனாசி ,, ,, 1—8 | ரோஜா ,, ,, 1—12 | 1—12. |

குழந்தைகளுக்கான கைகண்ட மருந்துகள்.

கோரோஜனை மாத்திரை (100 கொண்ட) புட்டி 1-க்கு 12 அணா.
கஸ்தூரி மாத்திரை ,, ,, 8 அணா.

வியாபாரிகளுக்கும் தக்க கமிஷன் உண்டு.

தயாரிப்பவர்:—

**C. B. ஸ்ரீநிவாச ராவ், ஆயுர்வேத வைத்யர்,**
92, வெங்கடாசல முதலி தெரு, மீர்சாஹிப்பேட்டை,
ராயப்பேட்டை P. O. மதராஸ்.

ஸ்ரீ:

॥ ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம: ॥

# வேதாந்த தீபிகை.

பத்ராதிபர்:—வங்கீபுரம் ஸ்ரீ. வாஸுதேவாசார்யர்.

ஸம்புடம் 18.] விபவ ஸூ, ஆனி மீ [ஸஞ்சிகை 9

த்ரிபுவநகமநம் தமாலவர்ணம் ரவிகரகௌரவராம்பரம் ததாநே ।
வபுரலககுலாவ்ருதாநநாப்ஜம் விஜயஸகே ரதிரஸ்து மேநவத்யா

[ஸ்ரீ பாகவதம். 1-9-23]

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

## ஒரு விண்ணப்பம்.

[காரப்பங்காடு வித்வாந் ஸ்ரீ. உ.வே. வேங்கடாசார்ய ஸ்வாமி.]

ஆஸ்திக மஹாஜந ஸமுதாயத்துக்கு ஒரு விண்ணப்பம். இந்த ப்ரார்த்தனையில் கண்ட விஷயங்களை தீபிகையின் ஸுஹ்ருத்துக்கள், பால பாஷிதமாகக் கருதாமல், அவச்யம் கவனிக்கவேண்டிய விஷயமாகக் கொள்ளவேணுமென்று ப்ரார்த்திக்கின்றேன்.

186785

சில க்ராமங்களில் உள்ளடிக் கலஹங்கள் உண்டாகிப் பல புரைகள் ஏற்பட்டிருப்பது ஸஹஜமேயாயிருக்கும். ஆனால் அடுத்த கிராமத்தாரால் உபத்ரவங்கள் நேரும்போது உள்ளடிப் புரைகளைப் பாராட்டாமல் ஒற்றுமைப்பட்டு, நேர்ந்த உபத்ரவத்தைத் தீர்த்துக்கொள்ளவேண்டியது அவச்யமாகும். அப்படியே அநேக இடங்களில் நடந்தும் வருகிறது.

186785

தத்காலம் ப்ராஹ்மண ஸமுதாயம் மிக்க துர்த்தசையை அடைந்திருக்கிறது யாவரும் அறிந்த விஷயமே. ப்ராஹ்மணர்கள் தங்களுடைய ஆசாரத்தையும் விட்டு, பிறர் வசைக்கும் ஆள்பட்டு, ஒற்றுமையும் அற்றுச் சீர் கெட்டு நிற்பதால் மற்றவர்கள் கண்ட இடமெங்கும் ஏச இடமாயிருக்கிறது. இவ்வகுப்பார் இன்னமும் ஆசாரங் கெட்டு, சீர் குலைந்து, அழியும் நிலைக்கு வேண்டிய சட்டம் இயற்ற முன்வந்திருக்குமவர்களுக்கு அரசாங்கத்தார் அநுமதியும் கொடுத்து வருகிறதாகத் தெரிகிறது. சட்டம் கொண்டுவர உரியவர்கள் ஆரென்பதை ஆராய்ந்தார்களில்லை. பணமும் மிகுந்து, கூட்டங்கூட்டத் திறமையும் வாய்ந்தவர்கள் ஓட்டுகளைப் பெற்றுச் சட்டஸபை மெம்பராக வருகிறார்கள். வர்ணாச்ரம தர்மங்களைப்பற்றியோ, மற்றுமுள்ள ஆசாரங்களைப்பற்றியோ சட்டம் இயற்றப்படுமானால், அதற்குச் சாஸ்த்ரங்களின் ஆராய்ச்சியும் வர்ணாச்ரம தர்மங்களின் உணர்ச்சியும் வேண்டுமென்பதைக் கொள்ளவேயில்லை. வர்ணாச்ரம தர்மங்களை ஒட்டிச் சட்டம் இயற்றப்பட வேண்டும் என்று ஆரேனும் சொல்லுவாராகில் 'இதென்ன, பழைய கப்பளித்தனம் இன்னும் விடவில்லையே!' என்று ஏசுகிறார்கள். பஞ்சம ஜாதியார் மெம்பராக ஏற்பட்டு ப்ராஹ்மணர்களுக்கு ஆசாரத் திருத்தத்துக்குச் சட்டம் செய்ய முற்படும் காலம் ஏற்பட்டிருக்கிறது. இன்ன தர்மத்தை இன்னார் விதிக்கவேண்டுமென்னும் நியதியே போய்விட்டது. முன்னாளில் ஜனங்களுக்குக் கெடுதி உண்டாகாமல் ஸௌகர்யமான வாழ்க்கை நிலைக்க வர்ணாச்ரம தர்மங்கள் குறைவற நடப்பதே காரணமெனக் கருதி நடத்தி வந்தார்கள். ஏதாவது துர்மரணம் முதலிய கெடுதிகள் உண்டானால், அரசர்கள் தங்களுடைய பரிபாலனக் குறைவால் வந்த தர்ம லோபமே அவைகட்குக்காரணமெனக் கருதி அவற்றைப் பரிஹரிக்கத் தேடுவார்கள். இந்நாளில் அப்படி துர்மரணங்களுக்குக் காரணம், பக்கங்களில் சப்பாத்து முதலிய அடர்ந்த காடு மேலிட்டு, ஸர்ப்பங்கள் முதலிய விஷ ஜந்துக்கள் வ்ருத்தி அடைவதனாலேயே என்று சொல்லுகிறார்கள். நாய் கடித்து ஒருவர் இறந்துவிட்டாரென்று நாய்களை அடிக்க ஒரு ப்ரபு மூல தநம் வைத்து நடத்தி வருகிறாரென்று கேள்விப்படுகிறோம். பல ஹாநி மேலிட்டுச் சிசு மரணங்களும் பல வ்யாதிகளும் உண்டாவது பால்ய விவாஹத்தாலே என்கிறார்கள். முன்னும் பால்ய விவாஹமே நடந்திருக்கிறது. அக் காலங்களில் இக் குறைகளைக் காணோம். அக் காலங்களில் இல்லாத சில அநீதிகள் இக் காலத்தில் நடையாடுவது காரணமென்று, அதுகொண்டு அறியலாயிருக்கத் தெளிவாரில்லை. பால்ய விவாஹம் முன்னாள் தொடங்கி நடந்து வந்திருக்க, அக் காலங்களில் இல்லாத குறை இப்போது உண்டா[illegible] பால்ய விவாஹமே காரணம் என்று கண்டு பிடித்த வழி எப்படியோ? [illegible] அநீதியான சட்டம் அநுஷ்டாநத்திற்கு வருமா



னால் அப்போது இன்னும் பல அநர்த்தங்கள் புதிதாய் விளையும். அப்போது இப்பெரியோர் 'நாம் இயற்றிய சட்டம் நன்மையை நாடியதே; ஆனால் அதை ஜனங்கள் சரியாக அநுஷ்டிக்காத குறையால் புதிய அநர்த்தம் விளைந்தது. ஆகையால் அதைத் தடுக்க புதியதோர் மசோதா கொண்டுவர வேண்டும்' என்பார்கள். புளிய மரத்தை வெட்டி வீழ்த்தினால் அதை வண்டியிலேற்றுவது ச்ரமப்படுமென்று நினைத்து, மரம் சாயும் இடத்தில் வண்டியை நிறுத்தி வைத்திருந்து, மரம் சாய்ந்தால் வண்டியும் மாடும் நொறுங்கி நசுங்கவே செய்யும். இந்த இடத்தில் 'மஞ்சுவாடு சகடை பஞ்சை'' என்று சொன்னவன் கதை ஜ்ஞாபகத்திற்கு வருகிறது. அவர்கள் கதை எப்படியானால் என்ன? அவர்கள் எவர்களேயாகிலும் நமக்குச் சட்டம் ஏற்படுத்துமவர்கள் அவர்கள் தானே! அவர்கள் கதையை விட்டு நம் கதையைப் பேசுவோம்.

இச் சட்டம் ப்ராஹ்மண ஸமுதாயத்திற்கே பாதகம். அதிலும் தங்களை ப்ராஹ்மணர்கள் என்று சொல்லிக்கொள்ளும் பெரியோர் சிலருண்டு. அவர்கள் அச்சட்டத்தைச் சீர் பெற நடத்துவதற்கு முன் வந்திருக்கிறார்கள். ஆகையால் இச்சட்டம் சில வைதிக கூட்டங்களுக்கும் ஆஸ்திகர்களுக்குமே பாதகமாகும். ''மெஜாரிடி'' ''மைனாரிடி'' என்கிற க்ரமத்தில் இந்த வைதிகர்கள் கவனிக்கப்படவே மாட்டார்கள். இவர்கள் பேசவும் ஸபையில் இடமில்லை. ப்ராஹ்மண ஸமுதாயமே ஒன்று சேராது. அதிலும் வைதிகக் கூட்டம் ஒன்று சேர்வது மிகவும் ச்ரமப்படும். அப்படிச் சேர்ந்தாலும் செய்யவேண்டிய லௌகிக முறை இக்காலத்திற்கேற்ப இன்னதென்பதை அவர்கள் உணர்ந்தார்களில்லை. அவர்களுக்கு அதை உணர்த்துபவர்களுமில்லை. இது விஷயத்தைப் பற்றி காதிலிட்டாரும் கவலைப்பட்டாருமேயில்லை. முதலில் இச்சட்டம் நமக்கு அநுகூலம் என்று நினைக்கும் ப்ராஹ்மணர்களுக்கு அதன் கெடுதியை நெஞ்சில் ஊட்டி, அவர்களை ஒன்று கூட்டி, க்ராமங்களில் கூட்டங் கூட்டி, நம் குறைகளைக் காட்டி, அரசாங்கத்தாருக்கு விண்ணப்பம் விடுக்க வேண்டும். இது விஷயமாக சுத்த வைதிக ஸமுதாயத்திற்கு வழி காட்ட லௌகிகத்தில் தேர்ச்சி யடைந்த ஆஸ்திகர்கள் முன்வரவேண்டும். இது விஷயமாக மடாதிபதிகளும் பீடாதிபதிகளும் கவலையெடுக்கவேண்டும். ஸ்ரீ சங்காசார்ய ஸ்வாமிகள் இவ்விஷயத்தைக் குறித்து கவலை எடுத்து முயற்சிப்பதைக் கேட்க மிக ஸந்தோஷிக்கிறோம் அப்படியே மற்ற மடாதிபதிகளும், பீடாதிபதிகளும், இதர ப்ரமுகர்களும் லௌகிக ஆஸ்திகர்களும் கவலைகொண்டு தலையெடுத்து முன்வந்து கூட்டங்கூட்டி இதை மறுக்கும் முயற்சி பயன்படுமாறு செய்யவேண்டும். மடாதிபதிகளும் பீடாதிபதிகளும் உபேக்ஷிப்பார்களாயின் ப்ராஹ்மண ஸமுதாயமே சீர் குலைய நேருங்கால் அவர்கள் ஆசார்ய பதம் நிர்வகித்துத் தங்கள் மதத்தின் உண்மைகளை உணர்த்திப் பரவச் செய்வது ஸாத்யமாகாது. ஆகையால் இதை

அவர்கள் கவலைப் பட்டு நடத்த வேண்டும். உபய கலையாரும் மற்றுமுள்ள ப்ராஹ்மணர்களும் சேர்ந்து, கமிட்டி ஒன்று ஏற்படுத்தி, இது விஷயமாய் க்ராமங்களிலும் நகரங்களிலும் ப்ரசாரவேலை செய்யும்படி அவர்களைக் கேட்டுக்கொள்ள வேண்டும். இதர ப்ரமுகர்கள், மடாதிபதிகள் பீடாதிபதிகளிடத்துச் சென்று அவர்களுக்கும் கவலை உண்டாக்கி, ஒற்றுமையுடன் முயற்சி செய்ய வற்புறுத்த வேண்டும். உடனே அநுஷ்டாநத்திற்கு வரச் செய்வது அவச்யமான கார்யம்.

இது ஒரு விஷயம். இதைக் காட்டிலும் அநேக மடங்கு பரிதாபகரமாய், பரிஹாஸாஸ்பதமாய், மஹத்தான அநர்த்தத்திற்குக் காரணமாய், த்ரவ்யச் செலவுக்கு மூலமாய், பூர்வாசார்யர்களுடைய திருவுள்ளத்திற்கு நேர் விரோதமாய் நாம் அநுஷ்டித்து வருவதொரு மற்றொரு விஷயம் உண்டு. அதை முக்யமாய் அடியோடு ஒழிக்கப் பாடுபட வேண்டும். தலையை உரலிலிட்டுத் துகைக்க, குண்டலம் தூளாய்ப் போமென வருந்துவது போல், ப்ராஹ்மண க்ருத்யத்திற்கே அடியோடு நாசம் ஏற்பட்டிருக்க, அவாந்தரமாக வைஷ்ணவர்களுக்குள் ஏற்பட்டிருக்கிற மநஸ்தாபங்களுக்கு எல்லையில்லாமல் இருக்கிறது. நம்முடைய ஆசாரத்திற்கு அடியோடு கேடு வந்திருக்க, அதற்கு ஒருவித முயற்சியும் எடுத்துக்கொள்ளாத நாமே, வைஷ்ணவர்களுக்குள் நாமே அவாந்தரமான கலஹங்களுக்கு முன்னே நின்று இல்லாத அநீதிகளைச் செய்யத் துணிகிறோம். அவை அநீதியான கார்யமேயாகிலும், தர்சந விஷயமாகையாலே அவை கூடுமெனச் சொல்லுகிறோம். தர்சந சப்தத்திற்கு விசிஷ்டாத்வைத ஸித்தாந்தத்தில் ஏகதேசமான மத பேதம் தானா அர்த்தமாகக் கொள்ளவேண்டியது? ஒருவன் மஹாநர்த்தத்திற்கும் ஆளாவதற்குக் காரணம் பாகவதாபசாரம் தவிர வேறில்லை என்று உபய ஸம்ப்ரதாயத்திலும் நிஷ்க்ருஷ்ட ஸித்தாந்தமாகக் கொண்டிருக்கிறோம். ஸஞ்சிதர்காமி கர்மங்களுக்கு நிவர்த்தகமாகக் கண்ட பக்தி யோகமும், அப்யுபகதம் அநப்யுபகதம் என்று இருவகையான ப்ராரப்தத்திற்கு நிவர்த்தகமாகக்கண்ட ஆர்த்த சரணாகதியும் த்ருப்த சரணாகதியும், பாகவதாபசாரத்தில் விலை செல்லாது தலை மடியும். பாகவதாபசாரமானது அநுபவித்தே தீரவேணும். ஆசார்யனும் பிராட்டியும் ஈச்வரனும் ஒன்று கூடிக் கை நீட்டிக் கைபிடித்து வைகுந்த மாநகர் புகுரவிட்டாலும், பாகவதாபசாரம் தலை கீழாகத் தள்ளிவிடும். இதை ஸநகாதிகள் திறத்து அபசாரப்பட்ட ஜய விஜயர்கள் திறத்துக் காணலாம். நித்யாநபாயிநியான பிராட்டியும் இளைய பெருமாளிடத்து அபசாரப்பட்டு லங்கையிலே புகுந்து அநர்த்தப்பட்டாளென்று உபதேசம் கேட்டிருக்கிறோம். நாநீர்வடிய, கண்ணீர்



பெருக, ஆர்த்தி தோற்றப் பிறர்க்கும் உபதேசித்தும் வருகிறோம். அப்படி உபதேசம் பெற்ற நாமே,—உபதேசிக்கிற நாமே—விநயாபிநயம் பண்ணிகையும் அஞ்சலியுமாய் நின்று "அடியேன் அடியேன்" என்று சொல்லிக்கொள்ளுகிற நாமே—அடியார்களைக் கண்டால் கண்ட விடத்திலேயே தண்டனிடவேண்டுமென்று கொண்டு அடி பணிந்து விழும் நாமே—இக்காலத்திலுள்ளவர்களுக்கு மாத்ரம் அன்றிக்கே நமக்கும் முன்னிருந்த பெரியோர்களுக்கும் பெரியோர் குல தெய்வமாய்க் கொண்டாடும் நெஞ்சுடையார் நெஞ்சுருகி ஈடுபட்டு ஏறியருளப் பண்ணிய பூர்வாசார்ய அர்ச்சா பிம்பங்களைப் பெயர்த்தும் உடைத்தும் தூளாக்கவும் துணிகிறோம். இதுவே தர்சந ஸ்தாபநமென்று சொல்லிக் கொள்கிறோம். ஆழ்வார்கள் ஒரு மிடறாய்த் 'தொண்டரெல்லீரும் வாரீர்' என்று அதிகாரிகளோடு அநதிகாரிகளோடு வாசியற குணாநுபவத்திற்கு வாருங்கோள் என்று கூவி அழைக்க, அவர்கள் காட்டித்தந்த ஸித்தாந்தத்தில் ஊற்றம்கொண்டிருக்கிற நாம், ஸதாசார்ய ஸம்பந்தம் பெற்று ஸித்தாந்த ஸாரம் அறிந்து உகக்கும் ஸ்ரீ வைஷ்ணவர்களை 'எங்கள் குழுவினில் புகுதலொட்டோம்' எனத் தடுத்தும், அடித்தும், துன்பப் படுத்துகிறோம். இதை நிரூபிக்க நம் ஸித்தாந்தத்துக்கு நேர் விரோதமான பாகவதாபசாரத்தில் எவ்வளவு முன்னின்று அநர்த்தத்திற்கு ஆளாகிறோமென்பது நன்கு விளங்கும். தம்முடைய பலங்கொண்டு களித்துத் திரியும் யாதவ குலத்தை அழிக்க நினைத்த கண்ணன் இதற்குப் பாகவதாபசாரம் தவிர வேறு வழி இல்லை என்று கருதி, அதையும் விளைத்து ஒருவர்க்கொருவரே காரணமாய் மடியச் செய்தது போல், ஆமூலசூடம் நிரபாயமான இந்த ஸித்தாந்தம் இப்படியே தழைத்து ஓங்குமானால் நரகம் புல்லெழுந்து போமெனக் கருதிய நிரங்குச ஸ்வதந்த்ரன் செய்து போரும் லீலா விசேஷமோ இதுவும் எனக் கருத வேண்டியிருக்கிறது. சேதநோஜ்ஜீவநார்த்தமான அவனுடைய க்ருஷி பரம்பரைகளை நினைக்குங்கால் இப்படிப் பேச வேண்டிவருகிறது. என் செய்வோம்! எம்பெருமானார் தம்முடைய நிரவதிக பரம க்ருபையாலே ஸித்தாந்தம் தழைக்கவேண்டிப் பாருலகில் ஆசையுடையோர்க்கெல்லாம் ஆரியர்காள் கூறுமென்று பேசி வரம்பறுத்தமை, இப்படி அநேக ஸம்ப்ரதாய பேதங்களுக்குக் காரணமாய் அநர்த்தத்துக்கு உடலாய் விழுந்தது. இப்படி ஈச்வரக்ருபை விலை செல்லாத நாட்டிலே—அவன் '[illegible]' என்று கைவிட்ட நாட்டிலே—அவனுடைய ஆணை அழிந்து கிடந்த நாட்டிலே—அவன் மநோரதம் பூர்த்தியடைய 'தமக்காவாரார்துணை' என்று பரிதபித்து நின்ற நாட்டிலே எம்பெருமானார் திருவவதரித்து நாடுதிருத்தி விபூதி த்வயமும் தம்முடைய சிறுமுறிக்குச் செல்லு நடத்த, அவனுங்கண்டு களித்து 'நாம் அநேகா

வதாரம் செய்தவிடத்தும் திருந்தாத நாடு திருந்தினபடி எப்படி?' என வியந்து வினவும்படி கலியுங்கெட நடந்தவர் அதிகம்பீர நிர்மல கருணை வருணாலய ஸர்வபூத ஸுஹ்ருத்தான ஸர்வேச்வரனுடைய க்ருபையும் நைர்க்ருண்யமே அவனுக் குள்ளது எனக் கருதலாம் படிக்குள்ள பெருமையுடைய பிரான் எம்பெருமானார் நெஞ்சில் நினைத்த நினைவும் பயனற்றதாம் படி செய்ய வல்ல காலக் கொடுமையை என் சொல்லிப் புலம்புவோம்!

ஸாத்விக ஜனங்கள் ஒருங்கே கூடி 'ராமாநுஜார்ய திவ்யாஜ்ஞா வர்த்ததாம் அபிவர்த்ததாம்' என்று தினந்தோறும் ஸர்வசக்தன் முன்பே—ஸர்வஜ்ஞன் முன்பே— முன்பெல்லாம் வகை அறியாது திண்டாடினவன் முன்பே— இன்று இவர் காட்டிய வழியை ஒழுங்காக நடத்தி வைக்க வேண்டியவன் முன்பே—இவ்வழி ஒழியில் திருத்தும் வழி வேறு எவ்வழியும் இல்லை என்று நன்கு கண்டறிந்தவன் முன்பே—ஒருமிடறாய்ப் பெருமிடறு செய்து மங்களாசாஸநம் செய்தும் பயனற்றொழிவதே! இதென்ன பாபம்! உத்தேச்ய விதாநம் ப்ராவண்யமும் கைங்கர்ய ஸம்வர்த்தநமும் ஒத்திருக்க ஸ்வல்பபேதம் காரணமாய்வந்த தென்கலை வடகலை விவாதம் போதாதென்று அதிலும் அவாந்தரங்கள் எவ்வளவு தலைப்பட்டுவிட்டது. ஸம்ப்ரதாயமென்பது ஔபதேசிக ஜ்ஞாந விசேஷமும் அநுஷ்டாந விசேஷமுமே யாகும். இது அவ்வவ்வாசார்யர்கள் அபிஸந்தி விசேஷத்தால் அபிப்ராய பேதங்கொண்டு நடைபெறும். அதை நம் ஆசார்யர்கள் உகந்ததெனக் கைக் கொள்ளவேண்டியதாய் இருக்கும். இது அவரவர்களுடைய ப்ரதிபத்தி விசேஷத்தைப் பொறுத்தது. ஒவ்வொருவரும் அப்படியே கைக்கொள்ள வேண்டியது அவச்யம். அதில் வாக்யார்த்த விசாரம் அவத்யாவஹம். 'கார்யம் ஹி ஸர்வம் யச்சோணாம் பவத: ஸர்வதோ அபித:' என்று தம் ஆசார்யன் திருவுள்ளத்தில் கொண்டதையே விரும்பி வினவினர் உண்டு. ஆக அவ்வவ்வாசார்ய பரம்பரா பரிக்ருஹீதாநுஷ்டாந விசேஷத்தை அநுவர்த்திப்பாரை ஆதரிக்கவன்றோ அமையும்? இகழ்ந்துரைப்பது எங்ஙனே பொறுக்கும்? ஸ்வ ஸ்வ பித்ரு சுச்ரூஷை அவரவர்களுக்கு ப்ராப்தம். அதில் அந்வயித்தார் ஆமோதிக்கப்படுவதும் அதைத் துறந்தார் இகழப்படுவதும் கண்டதுண்டு. இவ்வாறு இருக்க, இதர ஸம்ப்ரதாய தூஷணம் மேலிட்ட க்ரந்தங்களை நூதநமாய் வெளிப்படுத்துவது பொருந்தாது. அதனால் உத்தேச்ய ஸித்தியும் இல்லை. ஸ்ரீ பாஷ்யகாரர் விசிஷ்டாத்வைத ஸ்தாபநம் செய்தும், மற்ற மதங்களும் வ்ருத்தி அடைந்தே வருகிறது. வேதாந்த தேசிகனுக்குப் பிறகு நிகமாந்த தேசிகனும் அவருக்குப் பிறகு மணவாள மாமுநிகளும் அவதரித்தும் ஒவ்வொரு மதமும் குறைவுபடவில்லை. ஸர்வ சக்தர்கள் காலத்திலும் அப்படியானால் நாம் இன்று செய்ய



நினைப்பதென்ன? பூர்வாசார்ய க்ரந்த பரிசயத்துக்கே காலம் போதாதிருக்க, பயனற்றதும் தூஷண மாத்ர பர்யவஸாயியாய் அபசார ஹேதுவுமான நூதந க்ரந்த நிர்மாண ப்ரவ்ருத்தி எதற்காக? சில பெரியோர் தங்கள் பரம்பரையில் பின்புள்ளாருக்குத் தங்கள் ஆசார்ய ஸித்தாந்தம் எளிதில் தெரியக் கருதிச் சில விஷயங்களை தெளியக் காட்டினாலும், இதர மதத்தை எடுத்துத் தூஷிக்காமல் 'இது நம்மாசார்யர் நிர்வாஹம்' என்று காட்டி ஸ்வ மதத்தையே பேசி முடிப்பது உசிதமாகும்.

இப்படியே சில பெரியோர் பேசியிருப்பதையும் பார்க்கிறோம். சிலர் அம்முறையை விட்டு மற்றவைகளைத் தூஷிக்கவே முன் வருகிறார்கள்' அதை விட்டொழிக்க வேண்டிக்கொள்கிறேன். மடம் முதலியவைகளில் தென்கலை வடகலை என்கிற வைஷம்யம் கொண்டாடி, தூஷணம் மேலிட்ட க்ரந்தங்கள் வெளி வராதிருக்கவேண்டும். ஸந்நிதிகளில் உபய கலையாரும் ஒற்றுமைப்பட வேண்டியது அவசியம். ஒவ்வொருவரும் மற்றொரு வகுப்பாருக்கு ஸந்நிதிகளில் ஏற்பட்டிருக்கும் மர்யாதையை 'நம் இராமானுச மதமுடையாருக்கு ஏற்பட்டது நமக்கேயாம்' எனக் கொள்ளவேண்டும். ராமாநுஜீயத்வம் எல்லாருக்கும் ஒத்திருக்க, பேதத்துக்கு ஏன் இடங்கொடுக்கவேண்டும்? ஒவ்வொரு வகுப்பாரும் தங்களில் சில கூட்டத்தாருக்கு ஏற்பட்ட மர்யாதைகளைத் தங்கள் கூட்டத்தாருக்கு ஏற்பட்டதென்று கொண்டு ஆமோதிக்கிற முறை ஸமுதாயத்தில் ராமாநுஜீயத்வம் கொண்டு ஏன் கொள்ளலாகாது? பரம பதத்திலும் சில கைங்கர்யங்கள் வ்யவஸ்திதமாயே இருப்பதாகக் கேள்விப்படுகிறோம். காம க்ரோதம் ஒழிந்து தாங்களும் அதை அபிமாநிப்பதாலே யன்றோ ஆநந்தம் ஒத்திருக்கிறது? காட்டிலே புகுந்து நின்ற பெருமாளுக்கு ஆநந்த ஹேது வேறாய், பிராட்டிக்கும் இளைய பெருமாளுக்கும் தனித்தனியே வெவ்வேறாக இருக்க ஆநந்தம் ஒத்திருக்கையாலன்றோ 'ரேமாணா வநே த்ரய:' என்று எழுதி வைத்தான் ரிஷி. அதுவே யன்றோ பரம பதத்தில் நிலை? அதை இங்கு கொள்ளில் பரம பதம் ஏன் தேடவேண்டும்? தங்கள் வகுப்பாருக்கு ஏற்பட்டதாயினும் காம க்ரோதங்கள் ஒழியாதவன்று ரஸிக்காது. அது ரஸிக்கவேண்டி ஒருவித அபிமாநம் கொண்டு விடப்படும் காம க்ரோதங்களை இங்கும் அது போலுள்ள அபிமாநங் கொண்டு ஒழிப்பார்களாகில் நித்ய விபூதியில் அநுபவம் ஆருக்கு வேண்டும்? த்ருதராஷ்ட்ரனைப் 'பரலோக பீதி இன்றிக்கே பாண்டவர்கள் திறத்து அநீதிகளைச் செய்யாதே காமக்ரோதங்களை ஒழித்துப் போகடாய்' என்று பலமுறை உபதேசித்த முறை பயன்படாதது கண்டு, 'இனிப் பரலோகஜ்ஞாநம் அன்றிக்கே அர்த்தமே புருஷார்த்தமாய் ஐஹிக ஸுகமே பெரியதாய் நினைத்தாயேயாகிலும்

அதற்கும் காம க்ரோதங்கள் ஒழிய வேண்டும்' என ஓதி முடித்தார் ப்ர ஜாகரத்தில் விதுரர். ஆக, தமக்கு அபிமதமாகக் கொள்ளு மிடத்திலும் காம க்ரோதங்கள் புகுர வழி பலவுண்டு. அது ஒழிந்தாலல்லது ரஸிக்காது. ஆகவே அதை இங்கு செய்வது உத்தமம். இப்படி ஒருவாறு வைஷ்ணவ ஸமுதாயம் ஒற்றுமைப்பட்டு ப்ராஹ்மண ஸமுதாயமும் ஒன்று கூடினால் பாஹ்யோபாதி மேலிடாது.

இவ் வைஷ்ணவ ஸமுதாயம் ஒற்றுமைப்பட ஸந்நிதி முறைகளில் நடக்க வேண்டிய முறைகளை ஒருவாறு சீர் திருத்த வேண்டும். அதற்கு இரண்டு வழி உண்டு. அவைகளுள், எல்லா ஸந்நிதிகளிலும் உபய ஸம்ப்ர தாயிகளும் ஸமமாக அநுபவிக்க வேண்டிய முறை ஒன்று. அதில்லாவிடில் எந்த ஸந்நிதிகளில் எந்த முறை இருந்துவருகிறதோ அதற்குப் புதிதாய் ஒரு குறைகளும் ஏற்படாமல் அந்தந்த அநுஷ்டாநத்துக்குக் கீழ்ப்பட்டு மற்றொரு வகுப்பார் அநுபவிக்க வேண்டியதென்பது ஒன்று. இதில் முதல் பக்ஷம் முதல் பக்ஷமே. ஆனால் அது அநுஷ்டாநத்திற்கு வருவது மிகவும் அருமை. இரண்டாவது பக்ஷம் ஸுலபமாகும். அதை ஒருவாறு நிறைவேற்றலாம். ஆனால் எதுவேயாகிலும் எது ஸுலபம் என்று தோன்றுகிறதோ, அல்லது வேறுவகை உண்டாகிலும் கலஹம் ஒழிய வழியாக அதைக் கொள்ள வேண்டும். இது விஷயமாகவும் உபய கலையாரையும் சேர்த்து ஒரு கமிட்டி ஏற்படுத்தி அங்கங்கே இவ்விஷயத்தை விடாமுயற்சியாய் நடத்தவேண்டும். அநேக வர்ஷ காலமாய் இந்த ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ஸபை நடைபெற்றும், ஒற்றுமை படுத்த வேண்டிய வழி தேடவேயில்லை யெனத் தெரிகிறது. கோர்ட்டில் வ்யாஜ்யம் நடந்து கொண்டிருக்கிற விஷயத்தில் ஒருவர்க்கொருவர் விட்டுக்கொடுத்துத் தீர்த்துக்கொள்ள வேண்டும். இவ்விஷயத்தை இப்பொழுதாவது ஒருவித முடிவு செய்ய வேண்டுமெனக் கேட்டுக் கொள்ளுகிறேன். அடியேனுக்கு, நாம் எல்லாரும் எப்படியாவது ஒற்றுமையடைய வேண்டுமென்கிற ஆசை மேலிட்டதால் வாயில் வந்தபடி எழுதத் துணிந்தேன். இதிலுள்ள குணதோஷங்களைக் கண்ட பெரியோர் இப்படி வரையக் காரணமான மூல மனோபாவம் யாதெனக் கைக்கொண்டு குண தோஷங்களை விநியோகப் படுத்தவேண்டிய முறையில் விநியோகிக்க வேண்டுகிறேன்.

---



ஸ்ரீ:

# * பக்தியோகம்.

—:O:—

பூஜ்யர்கள் விஷயத்தில் உண்டாகும் ப்ரீதியானது பக்தி என்று சொல்லப்படுகிறது. 'ஸ்ரீதிவாஷெவ உந்யஷானம் ஹக்திரிதூஷியதெ' என்று அபியுக்தர்களின் வசநம்; 'ஸா வராநுராக்திரீஸ்வரெ' என்று சாண்டில்ய மஹர்ஷியின் ஸூத்ரம். ஸாத்விக பதார்த்த ஸேவையினால் அந்த:கரணசுத்தி உண்டாய், பகவத் விஷயத்தில் வருகிற ப்ரீதி விசேஷம் அவனைத் தெளிய அறியவேண்டு மென்கிற அபிநிவேசத்துக்கு ஹேதுவாய்ப் பக்தி என்று பெயர் பெற்றிருக்கிறது. இதனால் பகவத் விஷயத்திலுண்டாகிற நிரந்தர ஸ்ம்ருதி ஸந்ததியானது பரபக்தி என்று சொல்லப்படுகிறது. இது தான் பக்தியோகம். 'ஆத்மாவாஅரெ த்ரஷ்டவ்ய ஶ்ரோதவ்யோ மந்தவ்யோ நிதித்யாஸிதவ்ய:' என்கிற ச்ருதி வசநத்தால் இந்த பக்தியோகமே விதிக்கப்பட்டிருக்கிறது. இதற்குத் தர்சநஸமாநாகாரமான த்யாநம் விஷயம். த்யாநம், உபாஸநம், வேதநம், பக்தி இவைகள் பர்யாய சப்தங்கள். தைல தாரையைப்போல் இடைவெளி யின்றித் தொடர்ச்சியாக வந்துகொண்டிருக்கிற ஸ்ம்ருதி ஸந்ததியே த்யாநம். ப்ரீதிரூபாபந்நமான த்யாநமே மோக்ஷஸாதநம். எவன் ப்ரீதி பூர்வமாக நிரந்தரம் பகவானை த்யானிக்கிறானோ அவனே பகவானால் வரிக்கப்படுகிறான். அப்படிப்பட்ட பக்தர்களுடைய உள்ளத்தில் பரமபுருஷன் பரம க்ருபையினால்தான் நித்யவாஸம் செய்யாநின்றவனாக, ஜ்ஞாந தீபத்தின் ஒளியினால் அங்குள்ள அஜ்ஞாநாந்தகாரத்தைப் போக்கி, அவர்கள் தன்னை வந்து அடையும்படியான புத்தியைக் கொடுத்து, அவர்களை நற்கதி அடையச் செய்கிறான்.

இந்த பக்தி யோகத்துக்கு வர்ணாச்ரம தர்மங்கள் அங்கங்களாக இருக்கின்றன. 'வர்ணாஶ்ரமாசாரவதா புருஷேண பர: புமாந் । விஷ்ணுராராத்யதெ பந்தா நாந்யஸ்தத்தோஷகாரக:॥' என்று அபியுக்த வசநம். இந்த பக்தி யோகத்திலிருந்து நிரந்தர பகவச்சிந்தந ரூபமான திவ்யாம்ருத ரஸாஸ்வாதநம் செய்பவர்களுக்கு 'ஸத்யயாதஶ்ச மோக்ஷஸ்ய ஸிம்ஹவர்தீ-ஸ்தா:' என்கிற வசநத்தின்படி வரப்போகிற மோக்ஷரூபமான பரம

* விபவ வர்ஷம் சித்திரை மாஸம் 9, 10-ந் தேதிகளில் ஸ்ரீ மதுராந்தகத்தில் நடைபெற்ற ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ஸபா வார்ஷிக மகா ஸங்கத்தில் ஸ்ரீ. உ.ப. தட்டை. வே. ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமியால் செய்யப்பட்ட உபந்யாஸத்தின் ஸங்க்ரஹம்.

புருஷார்த்தத்தில் நம்பிக்கை உண்டாவதற்காக அஷ்ட மஹா ஸித்திகளும் ஸம்பவிக்கும். இவ்விதமான பக்தி எளிதி லுண்டாகாது. சென்றுபோன எத்தனையோ ஜந்மங்களில் செய்துள்ள நல்வினைப் பயனாக இது விளைகிறது. இதற்கு இடையூறாக இருக்கிற பாவங்க ளுள்ளவர்களுக்குப் பரம புருஷனுடைய ப்ரஸாதம் ஒருக்காலு முண்டாவதில்லை. 'ந மாம் துஷ்க்ருதிநோ மூடா: ப்ரபத்யந்தே நராதமா: । மாயயாபஹ்ருதஜ்ஞாநா ஆஸுரம் பாவமாஶ்ரிதா: ॥' என்று கீதாசார்யன் பக்தாக்ரகண்யனான அர்ஜுநனைக் குறித்துத் தானே வெளியிட்டான். பசுக்கள்போல் பகுத்தறிவற்றவர்கள் மூடர்கள். பகவானுடைய குண விபூதி முதலியவைகளைக் கேட்டும், அவைகளை மனத்தில் நிலைநிறுத்திக் கொள்ளாமல் கேட்ட உத்தர க்ஷணத்தில் மறந்து விடுகிறவர்கள் நராதமர்கள். பகவானுடைய மஹிமையையும் குணாதிசயங்களையும் கேட்டவுடன் குதர்க்கங்களால் அவைகளைக் கண்ணழிக்க யத்தனிப்பவர்கள் மாயயாபஹ்ருதஜ்ஞாநர்கள். பகவானுடைய குணவிபூதி முதலியவற்றைக் கேட்கக் கேட்கப் பகவத் விஷயத்தில் த்வேஷ புத்தியைப் பாராட்டுகிறவர்கள் அஸுர ஸ்வபாவமுள்ளவர்கள். பரம புருஷனைப் பஜநம் செய்பவர்கள் ஸுக்ருதசாலிகள். இந்த விஷயத்தையும் ஸ்ரீகீதாசார்யன், "சதுர்விதா பஜந்தே மாம் ஜநா: ஸுக்ருதிநோ(அ)ர்ஜுந । ஆர்த்தோ ஜிஜ்ஞாஸுரர்த்தார்த்தீ ஜ்ஞாநீ ச பரதர்ஷப । தேஷாம் ஜ்ஞாநீ நித்யயுக்த ஏகபக்திர்விஶிஷ்யதே । ப்ரியோ ஹி ஜ்ஞாநிநோ(அ)த்யர்த்தமஹம் ஸ ச மம ப்ரிய: । உதாரா: ஸர்வ ஏவைதே ஜ்ஞாநீ த்வாத்மைவ மே மதம் । ஆஸ்தித: ஸ ஹி யுக்தாத்மா மாமேவாநுத்தமாம் கதிம் । பஹூநாம் ஜந்மநாமந்தே ஜ்ஞாநவாந் மாம் ப்ரபத்யதே । வாஸுதேவ: ஸர்வமிதி ஸ மஹாத்மா ஸுதுர்லப: ।" என்று வெளியிட்டான். பலகாமனையினால் பகவானை அணுகுகிறவர்களான ஆர்த்தன், ஜிஜ்ஞாஸு, அர்த்தார்த்தீ இம்மூவர்களும் பகவத் க்ருபைக்கும் ப்ரீதிக்கும் சற்று விலகினவர்கள். பலாபிஸந்தி இல்லாமல் பகவத் பஜநம் செய்பவர்களான ஜ்ஞாநிகளோ பரம புருஷனால் தனக்கு அந்தர்யாமியாக ப்ரீதி பூர்வகமாக அபிமானிக்கப்படுகிறார்கள். '[illegible] ।' என்று ஜ்ஞாநியின் பெருமையைப் பகவான் தானே உகந்தருளினான்.

பரம பாகவதனான ப்ரஹ்லாதன் தன் பிதாவான ஹிரண்யகசிபு தன்னைக் குருகுலத்தினின்று வரவழைத்து 'இத்தனை நாளாகக் குருவினிடத்தினின்று நீ படித்ததைச் சொல்?' என்று கேட்கவே "ஶ்ரவணம் கீர்த்தநம் விஷ்ணோ: ஸ்மரணம் பாதஸேவநம் । அர்ச்சநம் வந்தநம் தாஸ்யம் ஸக்யமாத்மநிவேதநம் । இதி பும்ஸார்ப்பிதா விஷ்ணௌ பக்திஶ்சேந் நவலக்ஷணா । க்ரியேத பகவத்யத்தா தந்மந்யே(அ)தீதமுத்தமம் ।" என்று நவவித பக்தியின் ஸ்வரூபத்தை உத்தரமாகக் கூறினான். பகவத் குண கணங்களையும் விபூதிகளின் மஹிமையையும் கேட்குதல் ச்ரவண பக்தி; அவன் நாமங்களைச் சொல்லுதல் கீர்த்தநம்; அவன் கல்யாண குணங்களையும் பரத்வ ஸௌலப்ய ஸௌசீல்யங்களையும் நிரந்தரம் நினைத்தல் ஸ்மரணபக்தி; அர்ச்சா ரூபியான பரமாத்மாவினுடைய சரணங்களை ஸம்வாஹநம் செய்தல் பாதஸேவநமாம்; பத்மம் துளஸீ முதலியவைகளால் அவனைப் பூஜித்தல் அர்ச்சநம்; மனோவாக்காயங்களால் அவனை நமஸ்கரித்தல் வந்தநபக்தி என்று சொல்லப்படும்; அவனுக்கு அபிஷேக தீர்த்தாஹரணம் மாலாகரணம் முதலிய ஊழியங்களைச் செய்தல் தாஸ்யபக்தி; அர்ஜுநனைப்போல் ஸகித்வ புத்தியுடன் அவனுக்கு உகப்பான கார்யங்களைச் செய்தல் ஸக்யபக்தி; ப்ரத்யகாத்ம ரூபமான ஹவிஸ்ஸை அக்நியாகப் பாவிக்கப்பட்டுள்ள பரமாத்மாவினிடம் ப்ரணவத்தால் ஸமர்ப்பித்தல் ஆத்ம நிவேதந பக்தி என்று சொல்லப்படும். ப்ரகாராந்தரத்தால் இந்த பக்தியானது எட்டுவித மென்றும் கூறப்பட்டிருக்கிறது. "மத்பக்தஜநவாத்ஸல்யம் பூஜாயாம் சாநுமோதநம் । [illegible] மத்கதாஶ்ரவணே பக்தி: ஸ்வரநேத்ராங்கவிக்ரியா । [illegible] மமாநுஸ்மரணம் நித்யம் யச்ச மாம் நோபஜீவதி । பக்திரஷ்டவிதா ஹ்யேஷா யஸ்மிந் ம்லேச்சே(அ)பி வர்த்ததே । ஸ விப்ரேந்த்ரோ முநி: ஸ்ரீமாந் ஸ யதி: ஸ ச பண்டித: । தஸ்மை தேயம் ததோ க்ராஹ்யம் ஸ ச பூஜ்யோ யதா ஹ்யஹம் । [illegible] ।" என்று ஸ்ரிய: பதிக்குத் தன்னைப் பஜநம் செய்வதைவிடத் தன் பக்தனைப் பஜநம் செய்வது திருவுள்ளத்துக்கு உகப்பானது. இந்த விஷயத்தில் "ஆராதநாநாம் ஸர்வேஷாம் விஷ்ணோராராதநம் பரம் । தஸ்மாத் பரதரம் ப்ரோக்தம் ததீயாராதநம் பரம் ॥" என்கிற வசநம் ப்ரமாணம். இந்தப் பரபக்தியானது, ஸாக்ஷாத்கரிக்கவேண்டு மென்று அபிநிவேசத்தை உண்டாக்கி, '[illegible] ।' 'காணுமா றருளாய்,' 'ஒருநாள் காணவாராய்' என்று விலபிக்கும்படி பண்ணி, பகவத் ப்ரஸாதத்தாலே தத்கால நியதமான பரிபூர்ண ஸாக்ஷாத்காரத்தை உண்டாக்கும். இதுதான் பரஜ்ஞாநம். பகவத்ஸ்வரூப ஸாக்ஷாத்கார தசையில் பிறந்த ப்ரீதியின் ஆதிக்யம் பரமபக்தி என்று கூறப்படுகிறது. இந்த பரமபக்தியின் பெருமையைக் கருத்தில் கொண்டே ஸ்ரீபாஷ்யகாரர் ஸ்ரீபாஷ்யத்தின் தொடக்கத்தில் 'பவது மம பரஸ்மிந் ஶேமுஷீ பக்திரூபா ।' என்று பக்தியை வேண்டினார்.

பக்தி ஒன்றினாலேயே பரமபுருஷன் பக்தர்களா லடையத்தக்கவன். "பக்த்யா த்வநந்யயா ஶக்ய அஹமேவம்விதோ(அ)ர்ஜுந । ஜ்ஞாதும்

த்ரஷ்டும் ச தத்த்வேந ப்ரவேஷ்டும் ச பரந்தப ।' என்று பகவத் வசநம். 'பத்ரம் புஷ்பம் பலம் தோயம் யோ மே பக்த்யா ப்ரயச்சதி । ததஹம் பக்த்யுபஹ்ருதம் அச்நாமி ப்ரயதாத்மந: । அபி சேத் ஸுதுராசாரோ பஜதே மாமநந்யபாக் । ஸாதுரேவ ஸ மந்தவ்ய: ஸம்யக் வ்யவஸிதோ ஹி ஸ: । கௌந்தேய ப்ரதிஜாநீஹி ந மே பக்த: ப்ரணச்யதி ।' என்றும் பரஸ்ஸஹஸ்ர பகவத் வசநங்கள் இதில் ப்ரமாணங்களாக விளங்குகின்றன. 'ச்ரேயாம்ஸி பஹு விக்நாநி' என்கிற வசநத்தின்படி அதிக ச்ரேயஸ்கரமான இப்படிப்பட்ட பகவத் பஜநத்திற்கு இடையூறுகள் கணக்கிட முடியாதவைகள். 'ச்ரூயதே கிமு ராமாம்சே பக்தி விக்நஹதாம் நராணாம் । ஸம்ஸார நக்ரோத்கதா ஹீநா த்ருஷ்டயா: பரிவம்சிதா: । ஸத்யம் பதேந விக்நாநாம் ஸஹஸ்ரேண ததா ததா: । விக்நாயந்தே ந ராமாம்சே நராணாம் பக்தி நிச்சயாத் ॥' என்கிற வசநங்கள் இவற்றில் ப்ரமாணங்கள். 'யந்முஹூர்த்தம் க்ஷணம் வாபி வாஸுதேவோ ந சிந்த்யதே । ஸா ஹாநிஸ்தந் மஹச்சித்ரம் ஸா ப்ராந்தி: ஸா ச விக்ரியா ॥' என்கிற அபியுக்தர்களின் வசநப்ரகாரம் ஒரு க்ஷணகாலமாவது பகவச் சிந்தநமில்லாவிடில் பக்தன் தேஹத்தைத் தரித்திருக்கமாட்டான். அந்த ரஸாஸ்வாதம் பிறந்தவனுக்கு அந்த ஸுகம் ஒரு க்ஷணமில்லாமல் போகுமேயானால் இந்த பூலோகவாஸம் நரகம்போல் அருந்துதமாக இருக்கும். 'ஜாயமாநம் ஹி புருஷம் யம் பச்யேந் மதுஸூதந: । ஸாத்த்விக: ஸ து விஜ்ஞேய: ஸ வை மோக்ஷார்த்த சிந்தக: ।' என்கிற வசநத்தின்படி ஜாயமாந தசையில் பகவத் கடாக்ஷம் ஏற்பட்டவனுக்கே இந்த ஸர்வோத்தமமான பக்தி மார்க்கத்தில் ப்ரவ்ருத்தி உண்டாகிறது. ச்ரவணாதிகளான ஒன்பது விதமாயுள்ள பக்திகளுக்குள் தோஷங்களுக்கு நிதியாக இருக்கிற இந்தக் கலியுகத்தில் நாமஸங்கீர்த்தந ரூபமான பக்தி ஒன்றே மேன்மை வாய்ந்துள்ளது. இந்த அர்த்தத்தை, 'த்யாயந் க்ருதே யஜந் யஜ்ஞை: த்ரேதாயாம் த்வாபரே அர்ச்சயந் । யதாப்நோதி ததாப்நோதி கலௌ ஸங்கீர்த்ய கேசவம் ।' என்று மஹான்கள் கூறுகின்றனர்.

பகவத் பக்தியுள்ளவன் தாழ்ந்த எந்த வர்ணத்தைச் சார்ந்தவனாக இருந்தாலும் பூஜிக்கத்தக்கவனாக ஆகிறானென்பதையும், அந்தப் பக்தியில்லாதவன் உத்தமமான எந்த வர்ணத்தைச் சார்ந்தவனாக இருந்தாலும் மேன்மையடையானென்பதையும், 'ந சூத்ரா பகவத்பக்தா விப்ரா பாகவதா: ஸ்ம்ருதா: । ஸர்வவர்ணேஷு தே சூத்ரா யே ஹ்யபக்தா ஜநார்த்தநே ॥' என்று மஹரிஷிகள் கூறுகின்றனர். 'ந தபோபிர் ந வேதைச்ச ந தாநைர் ந சாபி கர்மணா । ஹரிர்ஹி ஸாத்யதே பக்த்யா ப்ரமாணம் தத்ர கோபி-



கா: । ந்ருணாம் ஜந்ம ஸஹஸ்ரேண பக்தௌ ப்ரீதிர்ஹி ஜாயதே । கலௌ பக்தி: கலௌ பக்தி: பக்த்யா க்ருஷ்ண: புர: ஸ்தித: । கலௌ த்ரேதை ரஸம் தீர்த்தே ரஸம் யோகே ரஸம் தபே: । கலௌ ஜ்ஞாந க்ஷமாஸாரே பக்திரேகைவ முக்திதா' என்கிற ப்ராமணிகர்களாகவும் ஸத்வோத்தமர்களாகவுமிருக்கிற மஹான்களின் வசந ஸஹஸ்ரங்களால் பரம புருஷனிடம் செய்யப்படும் பக்தி ஒன்றே புக்தி முக்திகளுக்கு ஸாதநம்.

ஸமஸ்தஜநகல்யாணே ஸாரவிஜயதேநே காம்த்ய ஹாரத்ய ஸூரதோகே
நிரதீக்ஷ்க்ஷ ச்ரீவமஹ ஸ்தூணவிவ மணயஜய காஉ ப்ரயாதாநு ।
உத்த்யாகாங்க்ஷ உபஉக்ஷ உஉரிவ மணிதே உக்த்யவாயெவிதஸ்ய
யஸ்மிந் கஸ்மிந் ஹவாஸ்யம் ப்ரததாதி ஹஜதி ஸ்ரீ பஸாயஜநம் முக்ஷம் ॥

ஸ்ரீ:

# தர்ம காரியங்களுக்காகப் போடப்படும் லாடெரி.

நமது தேசத்தில் 'கோவா' என்னும் பட்டணத்தில், கிருஸ்து மதத்தைச் சேர்ந்த ஒரு ஸாத்விகர், வ்யாதிகளால் வருந்தும் ஏழை ஜநங்களின் உபகாரத்திற்காகத் தர்ம வைத்ய சாலை ஒன்றைக் கட்டக் கருதி, அதற்குத் தேவையான த்ரவ்யத்தை ஸம்பாதிக்கும் பொருட்டுப் பெரியதொரு லாடெரி சீட்டை ஏற்பாடு செய்து வருகின்றார். அந்தச் சீட்டு லக்ஷக் கணக்காக விற்பனையாகி வருகின்றதாம். 'இவ்விதம் லாடெரி சீட்டுப் போடுவது தர்மத்திற்கு ஒத்ததா?' என்பதைப் பற்றி ஸந்தேஹித்து, ஒரு வடதேசத்திய ஆஸ்திகர், அதன் உண்மையை அறிந்துகொள்ள விருப்பம் கொண்டவராய், மஹாத்மா காந்திக்குக் கடிதம் எழுத, அம்மஹாத்மா இதன் குண தோஷங்களைச் சென்ற மே மாஸம் மூன்றாவது வாரத்திய 'யங் இந்தியா' என்னும் பத்ரிகையில் யுக்தி யுக்தமாகவும் ந்யாயங்களை முன்னிட்டுக் கொண்டும் விசாரித்திருக்கிறார். மஹாத்மா சொல்வதின் தாத்பர்யமாவது:—

லோகத்தில், எவ்வித பரிச்ரமுமின்றிக்கே சீக்ரத்திலேயே தநவான்களாக ஆகிவிட வேண்டும் என்னும் எண்ணம் ப்ராயேண எல்

லாருக்கும் உண்டு. மிகவும் யோக்யர்களென்று பிறரால் கௌரவிக்கக்கூடிய ஸ்திதியில் இருக்கும் பெரியோர்களும் இம்மாதிரியான எண்ணத்தால் சிற்சில ஸமயங்களில் வருந்துவதை நாம் பார்க்கிறோம். ஆனால், இப்படி இந்த எண்ணம் ஸர்வ ஸாதாரணமாக இருக்கையிலும், லோக நடவடிக்கையில் இது அவ்வளவாக ப்ரகாசமாகக் காணப்படவில்லை. இதற்குக் காரணம் அந்த எண்ணம் ஜநங்களின் மநஸ்ஸில் தீவ்ரமாக இல்லை என்பது அன்று; அந்த எண்ணத்தை ஸாதித்துக் கொடுக்கக்கூடிய உபாயங்கள் இந்த லோகத்தில் மிகவும் அருமையாக இருக்கின்றனவென்பதே இதற்கு முக்ய காரணம். இப்பொழுது ஏதாவது ஒரு தைவ ஸங்கல்பத்தால் அவ்வுபாயங்கள் பெருகும் பக்ஷத்தில், அநேகமாக எல்லா ஜநங்களும் அவைகளின் தர்மாதர்மங்களை விசாரியாமலே, அவைகளில் ப்ரவ்ருத்திப்பார்கள் என்பதில் ஆக்ஷேபமில்லை. மநுஷ்யர்களுக்குத் தேக ஸம்பந்தத்தால் இயற்கையாக ஏற்படும் அநேக துர்க்குணங்களுள் இந்த எண்ணமும் ஒன்று. காமம் க்ரோதம் முதலியவை போல இதுவும் ஆத்ம ச்ரேயஸ்ஸை விரோதிக்கத் தகுந்ததே. ஸத்வ குணம் மேலிட்டிருக்கும்படியான பாக்யத்தைப் பெற்றிருக்கும் சில மஹான்களைத் தவிர்த்து மற்றை ஜநங்களெல்லாரும் காம க்ரோதாதிகளுக்குப் பரவசராயிருப்பதுபோல இதற்கும் உட்பட்டவர்களாகவே காணப்படுகிறார்கள். காம க்ரோதங்கள் போல இதுவும் ஆத்ம நாசத்திற்குக் காரணமாகிறபடியால், விவேகிகளெல்லாரும் இதை அடக்குவதற்கே ப்ரயத்நப்பட வேண்டும்.

‘லாடெரி’ என்பது இந்தத் துஷ்ட எண்ணத்திற்கு உத்தீபகமென்றே நாம் அபிப்ராயப்படுகிறோம். திருடுவதைப் போலவும் மற்றவர்களை மோசம் செய்வதைப் போலவும் இது பெரிய தோஷமாகாமற் போனாலும், இது பேராசையை வளர்த்துகின்றது என்பதில் ஆக்ஷேபமில்லை. ‘ஜயித்தால் ஒன்றுக்கு ஆயிரம் கிடைக்கின்றது’ என்னும் ப்ரத்யாசையன்றோ ஜநங்களை லாடெரியின் ப்ரவ்ருத்தியில் தூண்டுகின்றது? ஒன்றுக்கு ஆயிரமாகத் திடீரென்று ஏற்படும் தந ஸம்பாதநம் முழுவதும் அநேக ஏழை ஜநங்களுக்கு அர்த்த நாசத்தை விளைவித்துக் கொண்டே ஏற்படும். அப்படி மற்றவர்களுக்குத் தீமையை விளைவித்துக் கொண்டு ஏற்படும் மேன்மையைத் தர்மத்துக்கு ஒத்த மேன்மையென்று தர்ம மறிந்தவர்கள் ஒத்துக்கொள்வார்களோ?

‘லாடெரி என்பது ஸாமாந்யமாக அதர்மமே; ஆனால் அது தர்ம கார்யங்களை உத்தேசித்துப் போடப்பட்டால், அதில் தர்ம விரோதமொன்றுமில்லை’ என்று சொல்பவர்கள் உண்டு. அப்படிச் சொல்வது அவர்களுடைய



பராமர்சக் குறைவையே காண்பிக்கின்றது என்றே நாம் நினைக்கிறோம். ஸ்வயமே அதர்மமாக இருக்கும் ஒரு ப்ரவ்ருத்தி, மற்றொரு தர்ம கார்ய ஸம்பந்தத்தால் தனது அதர்மத் தன்மையை இழந்து விடுமோ? அப்படி அவைகளை ஸம்பந்தப்படுத்துவதும் ந்யாயத்திற்கு ஒத்ததாகுமோ? ‘ஜயித்தால் ஏராளமான அர்த்த லாபம் கிடைக்கின்றது’ என்று அர்த்தத்திலுள்ள பேராசையை உத்தீபநம் செய்துகொண்டு, ‘ஜயிக்காவிட்டால் புண்யம் ஸம்பவிக்கும்’ என்று போதிப்பது ஒருகாலும் ஸந்மார்க்கத்தின் உபதேசமாகமாட்டாது. பகவத் ப்ரியமாயிருப்பதன்றோ புண்யம்? பேராசையைப் பெருகச்செய்வது பகவத் ப்ரியமாகுமோ? பேராசையால் தூண்டப்பட்டவர்களாய் ப்ரவ்ருத்தியைச் செய்து அந்த ப்ரவ்ருத்தியினால் துராசையை வளர்த்திக்கொண்டு, அந்த ப்ரவ்ருத்தியின் நடுவில் யாத்ருச்சிகமாக ஸம்பவிக்கும் அர்த்த நாசத்தைப் பகவதர்ப்பணமென்று சொல்வது பகவானை ஏமாற்றுவது போலன்றோ தோன்றுகின்றது? ஆகையால் ‘ஜயமடையாவிட்டால் உங்களுக்கு ஏற்படும் அர்த்த நாசம் புண்யத்தை ஜநிப்பிக்கும்’ என்று உபதேசிப்பவர்கள் தவறுதலான உபதேசத்தைச் செய்கிறார்களென்றே நாம் நினைக்கிறோம். சித்த சுத்தியால் த்ருப்தியடையும் பகவானுடைய விஷயத்தில் அசுத்தமான எண்ணத்தைப் பரம்பரையாக ஸம்பந்தப்படுத்துவதும் அவனுடைய முகோல்லாஸத்தின் பொருட்டு ஆகமாட்டாது என்பதில் ஆக்ஷேபமில்லை. இதை அறியாமல் நமது கிருஸ்துவ ஸஹ்ருத்துக்கள் அபதத்தில் ப்ரவ்ருத்தித்து ஸாமாந்ய ஜநங்களுக்குத் தீமையை விளைவிக்கிறார்களே என்று நாம் வருந்துகிறோம். அநேக ஜநங்களுக்கு ஆத்ம நாசத்திற்கு ஹேதுவாயுள்ள வ்யாபாரத்திற்கு இடம் கொடுத்துக்கொண்டு, ஸ்வல்ப ஜநங்களுக்கு தேஹ ஆரோக்யத்தைத் தேடுவது தைவ ஸம்மதமான கார்யமாகுமோ?

ஸ்ரீ:

# விவாக வயது மசோதா.

நாச்சியார் கோவில் வித்வான் அபிநவ சரஸ்வதி குருவார்ய நடாதூர் ஸ்வாமி கிருஷ்ணமாசாரியர் எழுதியது:—

இப்புண்ய பூமியின் முக கமலம் போன்ற இந்தியாவின்கண் ஹிந்து மத ஸம்பிரதாயம் சாஸ்திரம் முதலிய ஸநாதனதர்ம முறைக்கு முரண்பட்டதான ருதுமதீ விவாஹம் விவாக வயது சட்ட மசோதா இவைகளைக் கண்டித்து, ஆஸ்திகர்களான பல ஆசார்ய மடாதிபதிகளும் புருஷ சிகாமணிகளும் பற்பல உத்தம ஸ்திரீகளும் அரும்பாடு

பட்டு ஆங்காங்கு பிரசாரம் செய்து வருகின்றனர். அன்னியர்களின் பழக்க வழக்கங்களையும் மாயையின் மூட்டையையும் தழுவி நமது நன்னாட்டு நாகரிகத்தை ஆராய்ந்து நோக்காமல் கைநழுவ விட்டு, பிறகு பாபரூபமான அநாகரிகக் கஷ்டங்களுக்கு ஆளாகி அனுபவிக்கும்பொழுது தலைகுனிந்த வண்ணம் தாயான பூமியைக் கீழ்நோக்கிக் கண்ணீரால் அபிஷேகம் செய்து ஆறுதல் சொல்வோரற்றுத் தவிப்பதில் யாது பயனேற்படுமென்பதை நம் பாரத மாதாவின் தவப் புதல்வர்களும், தவச்செல்விகளாம் புதல்விகளும் சற்று நிதானித்து ஆலோசித்துப் பார்ப்பார்களேயாகில், நமதருமை மிகுந்த இன்றியமையாத மதாசார ரத்னத்தைத் தம்தம் ஹ்ருதய கமலத்திலணிந்து விளங்கிப் புராதன ஸத்தர்மங்களை அனுஷ்டிப்பதிலேயே ஆனந்தத்துடன் முன் வருவார்கள்.

ஸ்ரீ ஸர்வ ஜகத்காரண பூதனான ஸர்வேச்வரனும் விஷ்ணுவும் ச்ரியப்பதித்வத்தாலே யன்றோ சிறப்பெய்தியது? அப்படிப்பட்ட லக்ஷ்மீ கடாக்ஷ நோக்கத்தால் ஸகல லோகமும் மேன்மை பெற்றிருக்கின்றது. அதற்கிணங்கவே அண்டசராசரங்களுக்கு ஸ்ருஷ்டிகர்த்தாவான நான்முகனும் பிரும்ஹதேவனும் ஸரஸ்வதீ தேவியின் பெருமையால் விளங்குகின்றார். அநேகவிதமாய் அர்த்தநாரீச்வரக் கடவுளாம் சம்புவும், கருணை வாய்ந்த பார்வதீ தேவியாரால் பொலிவுற்றிருக்கின்றார். இவ்விதம் த்ரிமூர்த்திகளுமே தம் தம் தேவிமாரோடு அனுஷ்டித்துக் காட்டியிருப்பதால் இப் பூவுலகில் ஸ்திரீ புருஷர்களிருவரும் மனமொத்து இல்லற தர்மத்தை நடத்திவரக் கடமைப்பட்டிருக்கின்றனர்.

"ஏ, ஸௌபாக்கியவதி! என்னுடைய ஜீவனத்திற்கு முக்கியாதார ஹேதுவாயுள்ள இத் திருமங்கிலியமுள்ள நூலை உன் கழுத்தில் கட்டுகிறேன்; நீ நூறு வருஷம் க்ஷேமமாய் வாழவேண்டும்" என்ற அர்த்த புஷ்டியுள்ள மந்திரத்தைச் சொல்லிக் கலியாண காலத்தில் புருஷன் தனது தர்ம பத்நியின் வலம்புரிச் சங்கம்போன்ற கழுத்தில் கட்டுகிறான். இத்தால் ஸ்திரீ புமான்கள் இருவருக்கும் அந்தரங்க நேசம் ஏற்படுகிறதன்றோ! பசு, பூமி, எள், தங்கம், நெய், வஸ்த்ரம், தான்யம், வெல்லம், வெள்ளி, உப்பு இவை முதலிய பத்துவித தானங்களைக் காட்டிலும் மிகவும் சிறந்தது கன்யாதானமே. இந்தக் கன்யாதானத்தால், கன்னிகை பிறந்த இடத்திற்கும், புகுந்த இடத்திற்கும் புண்யமும் பெருமையும் உண்டாகிறது. கிரஹஸ்த தர்மமே ஸ்திரீ புருஷரின் மேன்மையினால் தான் விளங்குகிறது.

கிரஹஸ்தரிடத்தில் பிருஹ்மசாரிகள், ஸந்யாஸாச்ரமிகள், அதிதிகள், ஸாதுக்கள் முதலியவர்கள் அன்னத்தைப் பெற்றுப் புஜிக்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள். ஔபாஸந யாகாதி வைதிக காரியங்களும் பல லௌகிக காரியங்களும் ஸ்திரீபுமான் இருவரும் சேர்ந்துதான் செய்ய சாஸ்திரம் இடம் தருகிறது. இவர்களுக்கு ஜனிக்கிற ஸத்புத்திரனால் தகப்பன் தாய் இரண்டு வம்சத்து பித்ரு தேவதைகளுக்கும் திருப்தியளிக்கும்படியான வைதீக ஸத் கார்யங்கள் செய்யப் படுகின்றன. ஆதலின் கன்னிகாதான காலத்தில் பிதா மாதா இருவரால் மேற்கண்டபடி ஸங்கல்பிக்கப் படுகிறது. அதாவது:—[illegible]! அப் பெற்றோர்களது பித்ருக்களின் 20 தலைமுறைகளுக்கும் தமக்குமாக 21 தலைமுறை வரையில் புண்ய முண்டாவதற்காகவும், நித்திய நிரதிசய ஆனந்த சாச்வத பரப்



பிரும்ஹ லோகத்தை யடைவதற்காகவும், ஸ்ரீ பகவானுடைய பிரீதிக்காகவும், கன்யா தானமென்னும் அருமையான மஹா தானத்தைச் செய்கிறோம் என்று ஸங்கல்பித்து தமது அருந்தவப் புத்திரியாம் கன்னிகா ரத்னத்தை ஜாதகம், குணம், குலம், கல்வி, அழகு, பொருள் முதலியவைகள் பொருந்திய மாப்பிள்ளையின் கையில் ஸாக்ஷாத் ஸ்ரீ விஷ்ணுவுக்கு ஸமானமாக அந்த மாப்பிள்ளையை எண்ணிப் பூஜித்துக் கன்னியின் கைகளை மாப்பிள்ளையின் இரு கைகளிலும் பிடித்துக் கொடுத்து ஜலத்தை ஏந்திவிட்டு அவர்களால் தானம் செய்யப் படுகிறது.

"ஸாதுக்களை ரக்ஷிப்பதற்கும் துஷ்டர்களை நாசம் செய்வதற்கும் யுகம் தோறும் அவதரிக்கிறேன்" என்று நிரூபிக்கும் பகவத் கீதா வசனப்படி அவ்வெம்பெருமானே அதை அனுஷ்டித்துக் காட்டும் பொருட்டுத் தசரத சக்ரவர்த்திக்குத் திருமகனாக அவதரித்த ஸ்ரீ ராமனை மாப்பிள்ளையாகப் பெற்ற ஜனக மஹாராஜா தமது ஸத்புத்ரியான ஸீதையின் விவாஹ காலத்தில் ராமனை நோக்கி, "உமது ஸகல தர்மத்திற்கும் அனுகூலையாயும், மஹா பாக்யவதியாயும், உம்முடைய திருமேனியின் நிழலைப் போலவே ஸதா பின் செல்லப்பட்ட தன்மையோடு கூடிய எனதருந்தவப் புதல்வியான ஸ்ரீ ஸீதையின் கைகளை உமது திருக்கரங்களால் கிரஹியும்" என்று சொல்லிக் கைபிடித்துக் கொடுத்து அதிபால்ய வயதுள்ள ஸீதா தேவியைக் கந்யாதானம் செய்தனரென்றால் அவ்வித கந்யாதானத்தின் மஹிமையைப் புகழவேண்டுமானால் இரண்டாயிரம் நாவுள்ள ஆதி சேஷனாலும் முடியாதன்றோ! ஸ்ரீ விஷ்ணுவே ராமனாக அவதரிக்க, லக்ஷ்மீ ஸீதையாக அவதரித்துப் பர்த்தாவுக் கனுகூலையாயிருந்து உலகத்தில் ஸநாதன தர்மங்களை நிலைநிறுத்தி அவைகளை யாவரு மறிந்தனுஷ்டிக்குமாறு அத்திவ்ய தம்பதிகளே நன்றாய்விளக்கிக் காட்டியிருப்பதால் அதன்படி எல்லோரும் அனுஸரிக்கக் கடமைப்பட்டிருக்கின்றனர்.

8-வயதுடைய பெண் கந்நிகை; 9-வயதுடையவள் ரோகிணீ; 10 வயதுடையவள் கௌரீ; அதற்கு மேற்பட்ட வயதுடையவளே ரஜஸ்வலை (ப்ரௌடை) என்றுமுறையே கூறப்படுகிறாள். அப்படிப்பட்ட ரஜஸ்வலை என்கிற ப்ரௌடா விவாகத்தைப் பற்றி நிந்தித்து வேதோபப்ரும்ஹணங்களான ஸ்ம்ருதி சொல்வதாவது :—'10-வயதுக்கு மேற்பட்ட ரஜஸ்வலை என்ற ப்ரௌடா ஸ்திரீ, தகப்பன் கிரஹத்தில் கலியாணமாகாமலிருப்பளேயானால் பிராம்ஹண ஜாதியிலுதித்த பெருமை போய் வ்ருஷளி என்ற இதர ஜாதிப் பெண்ணாக ஆகிறாள். அவளை விவாஹம் செய்யும் புருஷனும் மேற்கண்ட வ்ருஷளியின் பதியானதால் அவன் சிராத்தாதி ஸத்கார்யங்களுக்கு அர்ஹனாகாமல் போகிறான். அப்படிக்கு அவனிருந்தும் அவனை சிராத்தத்தில் புஜிக்கச் சொல்லி விடும் பக்ஷத்தில் அந்த சிராத்தம் நஷ்டமடைந்து பித்ரு தேவதைகள் திருப்தியடையாமல் போவதோடு ஹவிஸ்ஸுக்களையும் ப்ரதிக்ரஹக்கிறார்களில்லை. அந்தப் பெண்ணை தானம் செய்த தகப்பன் தாய்மாருக்கு ஸ்வர்க்க லோகானந்தானுபவமும் கிடைப்பதில்லை. ஆகவே இந்த தர்மம் முக்கியமாக பிராஹ்மணனுக்கு உரித்தாயுள்ளது."

பிராம்மணச் சிறுவர்களுக்குத் தாயின் கர்ப்பத்திலிருந்தது முதல் 8-வயதுக்குள்ளாக உபநயநம் (பூணூல் கல்யாணம்,) செய்யவேண்டுமென்று வசனமிருப்பதால் பிராஹ்மண தர்மத்திற்கு ஏற்றபடி புருஷனுக்கு வேதத்தில் சொல்லுகிற விதிப்

படி பிரும்ஹோபதேசரூபமான உபநயந வயதை எட்டாக எப்படி குறிப்பிட்டு நிச்சயிக்கப்பட் டிருக்கிறதோ, அதுபோலவே பிராம்ஹண ஸ்திரீகளுக்கு வைதீக ஸத்கார்ய ரூபமாயும், உபநயநத்திற்கு ஸமானமாயுமுள்ள விவாஹத்தைப் பால்ய கந்யா பருவமான 8 வயதிலேயே செய்யும்படிக்கு வேத தர்ம சாஸ்திரங்க ளேற்பட் டிருக்கின்றன. வேத சாஸ்திரங்களில் சொல்லப்பட்ட ஸநாதன தர்மங்களையே நம்பி யிருக்கிற ப்ராம்ஹணர்கள் எவ்விதத்திலும் அவைகளைக் கைவிட்டு இழக்க நியாயமில்லை.

“ ஆடிப்பூரதினே க்ருதாவதரணு சூடிக்கொடுத்தாளியம்
கூடி ஸ்ரீரமணேந ஸாகமதுநா வேடிக்கையாய் க்ரீடதி |
தேடிப்பா ரிவளுக்கு நாஸ்தி ஸத்ருசீ பாடி ஸ்துதித்தாலிமாம்
ஓடிப்போம் ப்ரபலாபி ஸம்ஸாரணபீ நீடித்து நில்லாமலே.

என்றபடி ஸ்ரீவில்லிபுத்தூரில் திருவாடிப் பூரத்தில் அவதரித்த சூடிக்கொடுத்த நாச்சியாரென்ற ஆண்டாள், மாயவன்றன்னை மணஞ்செயக் கண்ட தாயநற் கனவைத் தோழிக்குரைக்கும் பிரகரணத்தில்,

“ வாரண மாயிரம் சூழவலஞ்செய்து
நாரண நம்பி நடக்கின்றா னென்றெதிர்
பூரண பொற்குடம் வைத்துப் புறமெங்கும்
தோரணம் நாட்டக் கனாக்கண்டேன் தோழீ ! நான்.”

இத்யாதியாக விவாஹ ஸமயத்தில் அனுஷ்டிக்கிற கங்கணம் கட்டுதல் பாணிக்
கிரஹணம், அம்மி மிதிப்பது (ஸப்தபதி), அக்நியைப் பிரதக்ஷிணம் செய்தல், பொரி இடு
தல், ஊர்வலம், மங்கள ஸ்நாநம் முதலிய ஸகலவிதமான கல்யாணத்தில் நடைபெறுகிற
ஸத்கார்யங்களை உலகத்திலுள்ள ஜனங்கள் அறியுமாறு ஸ்ரீ கோதை கூறியிருக்கிறார்.
[ஸ்ரீவைஷ்ணவர்களின் கல்யாண ஆசீர்வாத தினத்தில் அத்தம்பதிகளுக்குச் சுபம் உண்
டாக இப்பாடல்களைச் சொல்வார்கள்]. மாமன் தோள்மீதேறி பெண் மாப்பிள்ளை மாலை
மாற்றுவது ஊஞ்சல் நலங்கிடுதல் முதலிய மங்களகரமான வழக்கமும் வைதிக ரூப
மான மஹா கார்யங்களும் க்ஷேமாபிவிருத்திக்கு ஸாதனமான வேதமந்திரோச்சாரண
புரஸ்ஸரமாக ஸகல லக்ஷணங்களுடன் கலியாணத்தை நிறைவேற்ற வேண்டியதாயிருக்கி
றது.

ஆதலின் ருது (ப்ரௌடை) ஆகி வயது முதிர்ந்துள்ள பெண்களாவெனில்
மடம், அச்சம், நாணம் முதலிய ஸ்திரீகளுக்கு லக்ஷணமாய் இயற்கையா யமைந்த உணர்ச்
சியால், டலர் நிறைந்த ஸபையில் வந்து கலியாண ஸமயத்தில் ஸ்வபாவமாக நடத்த
வேண்டிய வைதிக லௌகிகச் சடங்குகளை அனுஷ்டிக்க இச்சிக்கவும் மாட்டார்
கள். பிறகு தர்மசாஸ்திர முறையைத் தழுவாமல் மோதிரம் மாற்றும் அனுஷ்டானத்
தில் வரும். அனுபவத்தில் சிறு கன்னிகைகளுக்கும் யுவபுருஷப் பையன்களுக்
கும் கலியாணம் நடக்கும்பொழுது தம்பதியான அவ்விருவரும் சாஸ்திர சம்மதமாய்
ஒரு பட்டுப் பாயின்மீது வீற்றிருக்கும் பொழுது ஒருவரை ஒருவர் கண்ணாரக் கண்டு
கருத்திற் களிகொள்வதும், அவ்விருவரின் காதல் பொருந்திய கடைவிழிகள் ஒன்றுக்



கொன்று போட்டி போட்டு நான் முன்னே நான் முன்னே என்று ஸந்திக்க நேர்ந்ததும், அவளது கருவிழியாகிய நீலோத்பல (கரு நெய்தல்) மலரை நாணிய நிலையில் அக்கன்னிகை புருஷனைப் பார்த்தவண்ணம் தலை வணங்கவே அவ்வருமையான நேத்திரகாந்தி அப்பொழுது லக்ஷ்மீநாராயணன் அர்த்த நாரீச்வரன் இவர்களது திருவருள் சேர்க்கை அனுஷ்டானத்திற்கிணங்க இத்தம்பதியாம் மணமகள் மணமகன் இருவருடைய சரீரம் இரண்டும் ஒன்றோடொன்று ஒரே ஆஸனத்தின்மீது நெருங்கியிருந்து பார்ப்பதால் கன்னியின் கண்காந்தியாகிற நீலோத்பல மலர்மாலை புமானுடைய மார்பில் விளங்கவும், அந்தப் புருஷனின் அன்பு நிறைந்த நேத்திர கமல மலர்மாலை அந்த மங்கள மணமகளின் மார்பில் போடப்பட்டதுபோல் பிரகாசிக்கவும், இவ்வித இணைபிரியாத நேசம் விவாஹ காலத்திலேயே மேன்மேல் அபிவிருத்தியாகி எக்காலத்திலும் விட்டுப் பிரியா நட்புடன் ஸர்வதேச ஸர்வகால ஸர்வாவஸ்தோசிதமாய் ஒருவருக்கொருவர் அன்பு விருத்தியாவதற்கு அனுகூலமான அரும்பெருங் கார்யங்களைச் செய்துகொண்டு ஸுகஜீவிகளாய் இல்லற தர்மத்தை நடத்திக்கொண்டு வருவதை இக்காலத்தில் எல்லோரும் நிதர்சனமாய் அனுபவத்தில் கண்டிருக்கிறோம்.

(இன்னும் வரும்)

சுதேசமித்திரன் பத்திரிகை.

---

ஸ்ரீ :

# கடிதங்கள்.

1

## ஸ்ரீ உபய வேதாந்த ப்ரவர்த்தந ஸபை, மல்லேச்வரம்.

**ஸ்ரீ வே. தீ. ஸம்பாதகருக்கு:—**

ஸ்ரீ. உபய வேதாந்த ப்ரவர்த்தந ஸபையின் 27-வது வார்ஷிக மஹா ஸங்கம் சென்ற ஏப்ரல் மீ 25உ மேல்கோட்டையில் நடை பெற்றது. தர்மாதிகாரி தர்ம ப்ரவர்த்தக மஹா வித்வாந் ஸ்ரீ. உப. நவீநம் ராமாநுஜாசார்ய ஸ்வாமி அக்ராஸநத்தை வஹித்தார். வித்யா விபூஷண மஹாவித்வாந் நுக்கஹல்லி ஸ்ரீ. உப. திருமலாசார்ய ஸ்வாமி முதலான அநேக வைதிகர்களும், பைநான்ஷியல் ஸெக்ரிடரி ஸ்ரீ. உப. பி. ஸ்ரீநிவாஸ ஐயங்கார் முதலிய அநேக லௌகிகர்களும், சில ஸ்த்ரீகளும் அப்பொழுது அவ்விடத்தில் ஸந்நிஹிதர்களாக இருந்தார்கள். ஸபையின் கார்யதர்சியாகிற ராவ் பஹதூர் ஆர். நரஸிம்மாசார்யர் வார்ஷிக அறிக்கையைப் படித்தார். அதற்குப் பிறகு, அக்ராஸநாதிபதியால் வார்ஷிக பரீக்ஷையில் நிஷ்பந்நர்களான பரீக்ஷிதர்களுக்கு நிர்த்திஷ்டமாயிருந்த ஸம்மாநங்கள் கொடுக்கப்பட்டன. 54 வித்யார்த்திகள் பரீக்ஷைக்கு வந்தார்கள். அவர்களுள் 48 பெயர்கள் நிஷ்பத்தியை அடைந்தார்கள். உத்தம ஸம்மாநம் ரூ. 30, அதமம் ரூ. 6. மொத்தம் ஸம்பாவனை ரூ. 515. மதிராஸ் ம. ரா. ரா. ஸ்ரீ. ராவ் பஹதூர் வி. ரங்கநாதம் செட்டியார் முதலான சில கனவான்கள் சில பரீக்ஷிதர்களுக்குப் புஸ்தகங்கள் இனாம் கொடுத்தார். இவை யெல்லாம் முடிந்த பிறகு, வித்யா விபூஷணம் மஹாவித்வாந் திருமலாசாரியர்

முதலான சில ப்ரமுக வித்வாங்கள், தத்வ விசார ரூபமான சில சிறந்த உபந்யாஸங்களைச் செய்தார்கள். பிறகு அக்ராஸநாதிபதிக்கு க்ருதஜ்ஞதாவிஷ்காரமும் மஹாராஜருக்கு மங்கள விஷயக ப்ரார்த்தனைகளும் செய்யப்பட்டு, ஸங்கம் கலைந்தது.

மல்லேச்வரம்
27—4—28

ஆர். நரஸிம்மாசார்யர்,
ஸபை கார்யதர்சி.

(2)

ஸ்ரீ. வே. தீ. ஸம்பாதகருக்கு:—

இந்த ஊரில் (பஸவன்குடியில்) நடந்த ஓர் வ்ருத்தாந்தத்தைப் பற்றி விமர்சிக்க வேணுமென்று சிலர் விரும்பியதின் பேரில் இந்த விண்ணப்பத்தை நான் செய்து கொள்ளுகிறேன் இது விஷயத்தில் ஜ்ஞாதாக்கள் தாஸன் பேரில் க்ருபைகூர்ந்து கொஞ்சம் சிரமம் எடுத்துக்கொண்டு அடியேனுடைய ஸம்சயத்தை நிவ்ருத்தி செய்து வைக்க வேணுமாய் ப்ரார்த்திக்கிறேன்.

அதாவது: ஒரு பெரிய மநுஷ்யர் க்ருகத்தில் இருந்துகொண்டிருந்த ஒரு பசுவுக்குக் காலதர்மம் நேர்ந்தது. பிறகு அந்தப் பசுவின் விஷயத்தில் ஓர் மகா வித்வான் ஸ்வாமி நியமித்ததாவது—" நீங்கள் இதைத் தகநம் செய்யத் தடை என்ன ? நான் இந்தப் பசு இறப்பதற்கு மூன்றுநாள் முன்னதாகவே ப்ரபத்தி பண்ணியிருக்கிறேனே. இந்த விஷயத்தில் உங்களுக்குச் சங்கை வேண்டியதில்லை" என்ற இந்த வார்த்தையைக் கேட்டபிறகு அந்தப் பசுவைத் தகநம் செய்துவிட்டார்கள். சிலர் இதைப் பிசகு என்றும், சிலர், 'ஸ்ரீராமர் ஜடாயுவைத் தகநம் செய்யவில்லையா? அம்மாதிரி இதுவும் திர்யக் தானே' என்றும் வாசா யுக்தி சொல்லுகிறார்கள். ஸ்ரீராமாயணம் ஆரண்ய காண்டம் 68-வது ஸர்க்கத்தில் $31\frac{1}{2}$ ச்லோக வியாக்யானம் தனிச்லோகி கோவிந்தராஜீயத்தில்தாஸன்கண்ட ப்ரமாணமாவது.—" திர்யக்த்வம் கத்ருதாயிகார்யாஹாவெலிபக்ஷத ஸம்ஸ்கார்ராணாம் வர்ணோகா ஹாவாக் ஷம் ஷயா ஸம்ஸ்க்ருதஸ்ய உதந்ஜ யெவாத—த்ஹாஸ்ய ணோகாஸ்மத்" என்று அதன் விஷயத்தில் மாத்திரமும், அதே ச்லோகத்தின் ஸ்ரீதீர்ய வியாக்யானத்தில், தத்ஜம் என்று துடங்கி,

" ஸம்ஸ்கார சகலோத்தஸ்ய ராஜோ ஸ்ருஹ வியாநதஃ ।
ஸ்வத்வம் ந சுகள தஸ்யை ஸோவிராசவு ஸாதுதஃ ॥
ஹரெ ஸ்வாமாநஸ்ய ராவெண வ்யயள வாரவஸம் ॥ "

" இதி ஜடாயுஷ: ப்ரதிவாத்ஜவைத்ந திர்யக்த்வவி ஸைஹாதிதா யாத்தஹதி யுக்திம் " என்கிற வசநமும் கிடைத்தது. இந்த விஷயத்தில் பெரியோர்கள் ஸம்சயமற பத்ரிகா மூலமாய்த் தெரிவித்தால் அதைப் பார்த்து ஸம்சய நிவ்ருத்தி செய்துகொள்ள வேண்டுமென்று ப்ரார்த்திக்கிறேன்.

பெங்களூர் ஸிடி
பஸவன்குடி
19—4—28.

இப்படிக்கு,
கோமாண்டூர் இளையவில்லி திருவேங்கடதாஸன்.



(3)

ஸ்ரீமத் வேதாந்த தீபிகைப் பத்திராதிபருக்கு:—

(1) சில கல்விமான்களால் ஆழ்வார்கள் விஷயமாக இப்போது செய்யப்பட்டு வரும் சமயதத்துவ காலவாராய்ச்சிகள், சில உண்மைகளை மறைத்தும் சில உண்மைகளை வெளிப்படுத்தியும் பொருத்தமில்லாச் சிலவற்றைச் சேர்த்தும் செல்லுகின்றபடியால் இவற்றினை நன்காய்ந்து சில உண்மைகளை வெளிப்படுத்த வேண்டுமென்ற நோக்கத்துடன், யாம், வேதாந்த தீபிகை 16ம் ஸம்புடம் 52ம் பக்கத்தில் ஒரு வேண்டுகோளைக் குறித்தோம். அக் குறிப்பு வெளியாகி இற்றைக்கு இரண்டரை யாண்டுகள் சென்றும் யாரும் எமக்கு அப்பிரார்த்தனையின்படி ஏதும் தெரிவித்தார் இல்லை. என்றாலும், யாம் பல நூல்களை யாய்ந்தும், அறிந்த பெரியோர்களை அடுத்துக் கேட்டும் ஒருவாறாக 'நம்மாழ்வார் வரலாறுங் காலமும்' என்ற ஆராய்ச்சியினை எழுதி வருகின்றோம். வேதாந்த தீபிகையில் இடமில்லையென்று தெரிய வந்தபடியால், எமதாராய்ச்சி யுரையினை, திருநெல்வேலி "ஸ்ரீவைஷ்ணவன்" பத்திரிகைக்குச் சிறிது சிறிதாக அனுப்பி வருகிறோம். ஆஸ்திகர்கள் அப்பத்திரிகையைக் கண்ணுற வேண்டுகிறோம். இப்போதாவது, இவ்வாராய்ச்சியைப் பற்றி ஏதாவது தெரிவிக்க விரும்பினால், எமக்கு எழுதப் பிரார்த்திக்கிறோம். வேதாந்த தீபிகை பத்திரிகாசிரியரும் இதனை ஆதரித் தெழுதுவாரென்று நம்புகிறோம்.

(2) எமது 'சமயம்' என்னுங் கட்டுரையின் இரண்டாம் பாகம், 'ஐம்பொருள் தத்துவ ஆராய்ச்சி' என்ற பகுதிக்கண் மிக விரிவாக ஆராயப்பட்டு வருகின்றது. வேதாந்த தீபிகை இடந்தருமாகில், இன்னம் 7 அல்லது 8 மாதங்களுள் வெளிவரல் ஆகும்.

(3) அறிஞர்கள் வழங்கும் கட்டுரைகளில் கைதவறுதலாகச் சில இலக்கணப் பிழைகளும் இலக்கியப் பிழைகளும் அச்சுப்பிழைகளும் நேர்தல் இயற்கையே. அறிவுடையோாகள் அதைப்பற்றி மன்னிக்கவேண்டுமே ஒழியக் குற்றங் காணலாகாது. எமது 'கம்பர்' ஆராய்ச்சியில் சில பிழைகள் காணப்படுகின்றன: அது தனிப் புத்தகமாகச் செய்யப்படப் போகின்றமையான், அப்பிழைகள் எல்லாம் திருத்தப்பட்டு வெளிவருமென்று மிகத் தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

ஸ்ரீ வைஷ்ணவர் பாததூளி,
இராமகிருஷ்ண சடகோபதாஸன்.

29—5—28.

---

## ஸ்ரீ வை. ஸி. ஸபைக்கு ஒரு ஸுஹ்ருத்தின் ஸஹாயம்.

ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ஸபையில் விசேஷ ச்ரத்தையுள்ளவரும், நாமக்கல் வக்கீலுமான ஸ்ரீ உப. கே. வீரராகவ அய்யங்கார் ஸ்வாமி ஸபையின் வார்ஷிக மஹா ஸங்கத்திற்கு வரக்கூடாமற் போனதுபற்றி அநுதாபப்பட்டு ஸபையின் கார்யதர்சிக்கு எழுதிய பத்திரிகையில் ஸபைக்கு ரூ 100 த்ரவ்ய ஸஹாயஞ் செய்வதாகத் திருவுள்ளம் பற்றிச் சில ரஸமான யோசனைகளையும் ஸாதித்திருக்கிறார். அவற்றைப்பற்றி நமது இதர தீபிகாபிமானிகளும் ச்ரத்தை செலுத்தவேண்டி, அப்பத்ரிகையின் ஸங்க்ரஹத்தைத் 'தீபிகை'யில் ப்ரசுரிப்பது உசிதமென நினைத்து இங்கு ப்ரசுரிக்கப்படுகிறது. அந்த ஸ்வாமி ஸாதித்துள்ள அபிப்பிராயமாவது:—

'அடியேனுக்கு வெகு நாளாக ஒரு விஜ்ஞாபநம் செய்துகொள்ள வேண்டுமென்று அபிப்ராயம். தேவரீர்களைப் போன்ற அநேக ஸ்வாமிகள் நம் விசிஷ்டாத்வைத ஸித்தாந்தம் வீண் போகாமல் எல்லோரும் அநுஷ்டித்து க்ருதார்த்தர்களாகும் பொருட்டுப் பலவித ச்ரமங்களை யோசிக்காமல் பாடுபட்டு வருவதில் வர்ஷா வர்ஷம் இப்படி ஸதஸ் கூடி மஹோத்ஸவம் நடத்துவதற்கு எல்லா ஆஸ்திகர்களும் ரொம்ப க்ருதஜ்ஞர்களாக இருக்கக் கடமைப் பட்டிருக்கிறார்கள்.

மாஸாந்த தீபிகை போடுவதாலும், வருஷாந்த ஸதஸ் கூடுவதாலும் மட்டும் உத்தேசம் நிறைவேறுதென்று அடியேனுக்குத் தோன்றுவதால், அடியிற் கண்ட

படிக்கோ வேறுவிதமாகவோ சில புதிய தீர்மானங்களைச் செய்து, அதன்படி வேண்டியதைச் செய்யவேண்டுமாய் ரொம்பவும் ப்ரார்த்தித்துக் கொள்ளுகிறேன்.

ஸ்ரீவைஷ்ணவர்கள் இருக்கும் ஒவ்வொரு ஊரிலும் ஒவ்வொரு ஸபையைக் கூட்டி, அதில் ப்ரதிதினமும் ஸ்வல்ப காலமாவது க்ரந்த காலக்ஷேபம், பகவதாராதநம் முதலிய கார்யங்களை அவர்கள் அநுஷ்டிக்கும்படி செய்யவேண்டும். ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ஸபையினின்று இப்பொழுது ஸ்வாமிகளை சில காலத்துக்கு சில இடங்களுக்கு மாத்ரம் அனுப்பி உபந்யாஸங்கள் செய்து வரப்படுகின்றன. அதில் விசேஷ ப்ரயோஜநம் தெரியவில்லை. உபந்யாஸ மானவுடன் உபந்யாஸ விஷயங்கள் மறந்துபோய்விடுகின்றன. அநுஷ்டாந பர்யவஸாயியாக அவை வருவதில்லை. ஆதலால் வர்ஷம் முழுவதும் ஊர் ஊராக உபந்யாஸங்கள் செய்யும்படி சிலரைப் பிரார்த்தித்து, அந்தப்படி நடத்திவரவேண்டும். அத்துடன் இதர சில ஸ்வாமிகளைக் கொண்டும் அதிக ச்ரமம் கொடுக்காமல் சில இடங்களில் உபந்யாஸங்கள் செய்ய ஏற்பாடு செய்யலாம். இது விஷயங்களை யோஜித்துத் தகுந்த முயற்சி செய்ய ப்ரார்த்திக்கிறேன். ஆனால் இவைகளுக்கு த்ரவ்யம் அவச்யம் வேண்டியதுதான். தற்கால நாகரிகத்திலும் கார்யங்களிலும் இவ்வித விஷயங்களில் செலவிடக் கூடியவர்கள் சிலர் தானிருக்கக்கூடும். இருந்தாலும் பகவான் இத்தர்ம கார்யங்களில் ப்ரவ்ருத்திப்பவர்களைக் கைவிடமாட்டார். மேற்கண்டபடியாவது வேறுவிதமாகவாவது சாச்வதமாகவும் விஸ்தாரமாகவும் நமது மதம் பரவும்படியும் அநுஷ்டிக்கப்படும்படியும் தீர்மானங்கள் செய்தால் அதன் செலவுக்காகத் தாஸனுடைய ஸமர்ப்பணையாக நானது வர்ஷத்திற்கு ரூ. 100 செலுத்திக் கொள்ளுகிறேன். அதைத் திருவுள்ளம் பற்றப் பிரார்த்திக்கிறேன்.

தாஸன் வீரராகவன்.

## விவாஹ வயஸ் மசோதா கண்டநம்.

டில்லி சட்டசபையில் ஹிந்து கன்னிகைகளின் விவாஹ வயதை 14-ஆக உயர்த்தி அதற்கு முன் விவாஹம் செய்பவர்வர்களைத் தண்டிப்பதாகக் கொண்டுவரப்பட்டிருக்கும் மசோதாவைக் கண்டிப்பதன் நிமித்தம் சென்னை ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ஸபையின் ஆதரவில் சென்ற ஜூன்மாதம் 23-ந் தேதி ராத்ரி 8-மணிக்கு திருவல்லிக்கேணி ஸ்ரீ அஹோபில மடத்தில் ஹிந்து ஸமூகத்தினருடைய பொதுக் கூட்டமொன்று நடைபெற்றது. ஸபையின் உப அத்யக்ஷர்களில் ஒருவரான கோயம்புத்தூர் ஸ்ரீ. உப. ஸி. வி. வெங்கடரமண அய்யங்கார் ஸ்வாமி அக்ராஸநம் வகித்தார். பிராமண ஸமூகத்தினர் ஏராளமாகக் கூட்டத்திற்கு எழுந்தருளியிருந்தனர். வித்வான்களான ஸ்ரீ உப. குடவாசல் நரஸிம்மாசார்ய ஸ்வாமி, ஸ்ரீ உப. திருமழிசை ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி, ஸ்ரீ உப. என் ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி, ஸ்ரீ உப மேலபாக்கம் குமாரதாதாசார்யர் ஸ்வாமி, ஸ்ரீ. உப: திருமங்கலம் நரஸிம்மாசார்யர் ஸ்வாமி ஆகியோர் விவாஹப்படி ஒரு முக்கிய ஸம்ஸ்காரமாக ப்ராமணர்களால் பாவிக்கப்பட்டு வருகிறதென்பதையும், இரண்டொரு தோஷங்களை நிவர்த்திப்பதாக ப்ரவர்த்திக்கும் இம்மசோதா சட்டமானால் எப்படி ஸமூஹத்திற்குப் புதிதாகவும் பஹுவாகவும் வேறு கெடுதல்களை யுண்டுபண்ணு மென்பதை விஸ்தாரமாக எடுத்துச் சொன்னார்கள். பல ப்ரசாரத்தினாலும் மதாநுஷ்டானத்தில் குறுக்கிடும் இம் மசோதாவை எதிர்த்துக் கண்டிக்க வேண்டுமென்று அந்த ஸ்வாமிகள் கேட்டுக்கொண்டனர்.

முடிவில் அக்ராஸனர் இம் மசோதா மத ஸம்ஹ விஷயங்களில் தலையிடுவதாகுமென்றும், அதற்கு இடம் கொடுக்கக் கூடாதென்றும், இந்தியா சட்ட சபையிலுள்ள சென்னை ராஜதானியின் பிரதானிகள் (பெரும்பாலோர் ஸ்ரீ வைஷ்ணவர்கள்) இம் மசோதாவினின்று சென்னை மாகாணத்தை விலக்கவாவது ப்ரயத்நப்படுமாறு கேட்டுக் கொள்ள வேண்டுமென்றும் சொன்னார்.

மசோதாவைப் பலமாகக் கண்டிப்பதாகவும் விவாஹ வயதை நிர்ணயஞ் செய்யவும் நியமிக்கப்பட விருக்கும் கமிட்டியில் (இக் கமிட்டி நியமநம் பின்னால் ஆகிவிட்டது.) வைதிகர்களுடைய பிரதிநிதிகளை நியமிக்கவேண்டுமென்றும் தீர்மானங்கள் செய்யப்பட்டன. பிறகு க்ருதஜ்ஞ தாவிஷ்காணத்துடன் கூட்டம் முடிவு பெற்றது.

ஸ்ரீ:

॥ ஸ்ரீமதே ஶ்ருதி ந்ருஸிம்ஹவர ப்ரஹ்மணே நம: ॥

யோঽந்த: ப்ரவிஶ்ய மம வாசமிமாம் ப்ரஸுப்தாம்
ஸஞ்ஜீவயத்யகிலஶக்திதர: ஸ்வதாம்நா ।
அந்யாம்ஶ்ச ஹஸ்தசரணஶ்ரவணத்வகாதீந்
ப்ராணாந் நமோ பகவதே புருஷாய துப்யம் ॥

# பத்ராதிபரின் குறிப்புகள்.

**ஸ்ரீவைஷ்ணவர்களுக்குள் ஒற்றுமை.**

ஸ்ரீ. உப. காரப்பங்காடு வித்வாந் வெங்கடாசார்ய ஸ்வாமி, ஸ்ரீவைஷ்ணவர்களுக்குள் பரஸ்பரம் இருக்கவேண்டிய ஒற்றுமையையும் ஸௌஹார்த்தத்தையும் பற்றி, நமது தீபிகையின் வழியாக ஸ்ரீ பாகவத ஸமுதாயத்திற்கு ஒரு விஜ்ஞாபநம் செய்துகொண்டிருக்கிறார். அதை நாம் இந்த ஸஞ்சிகையில் ப்ரசுரம் செய்திருக்கிறோம். அதில் வெளிவந்திருக்கும் அவருடைய ஸாத்விக மநோபாவத்தைப் பார்க்க நமக்கு மிக்க ஆஹ்லாதம் ஜநிக்கின்றது. இம்மாதிரியான உதார சித்த வ்ருத்தி மற்றை வைதிக வித்வாந்களிடத்திலும் காணப்படும் பக்ஷத்தில், நம்மால் ப்ரார்த்திக்கப்படும் ஒற்றுமையும் ஸௌஹார்த்தமும் எவ்வித ச்ரமமுமின்றிக்கே சீக்ரத்தில் ப்ராப்தமாகி விடுமென்பதில் ஆக்ஷேபமில்லை.

இப்பொழுது நாம், கலா ப்ரயுக்தமாகவும் ஸம்ப்ரதாய ப்ரயுக்தமாகவும் பரஸ்பரம் த்வேஷித்துக் கொண்டும், இதர அவிவேகிகள் போல பரஸ்பரம் கலஹம் செய்து கொண்டும் வருகிறோம். அபிப்ராய பேதங்களால் ஸம்பவிக்கும் அநுஷ்டாந விசேஷங்களைக் காரணமாகக் கொண்டு, நாம், இதரர்கள் பரிஹஸிக்கும்படி பரஸ்பரம் நிந்தித்தும் வருகிறோம். இது பகவத் ராமாநுஜ தாஸர்களான நமக்கு உசிதமாகுமோ? விவேகிகளான ஸ்ரீ வைஷ்ணவர்கள்

இதைச் சற்று கவனிக்க வேண்டும். ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ஸபையின் ப்ரவர்த்தகர்கள், சில வருஷங்களுக்கு முன், நமக்குள் காணப்படும் இந்தத் துர்தசையை நிவ்ருத்திக்க வேண்டி, பஹு ப்ரகாரமாக பல ப்ரயத்நங்களைச் செய்தார்கள். அப்பொழுது அவர்களுக்கு நமது வைதிக வித்வாங்களுடைய ஆபிமுக்யம் கிடைக்காம லிருந்தபடியால், அவர்களுடைய ப்ரயத்நங்க ளெல்லாம் வீணாகிவிட்டன. இப்பொழுது ஸ்ரீ வெங்கடாசார்ய ஸ்வாமியின் பத்ரிகையைப் பார்க்க, அந்த ஆபிமுக்யம் லபிக்கு மென்று தோன்றுகின்றது. இந்த அநுகூல அவஸரத்தைக் கைதவற விடாமல் ஸ்ரீ ஸபையின் ப்ரவர்த்தகர்கள் மறுபடியும் இந்த ப்ரயத்நத்தில் ப்ரவ்ருத்திப்பார்களென்று நாம் நம்புகிறோம்.

***　　***　　***

வருகிற ஆடி மாஸம் 26௳ வெள்ளிக்கிழமை (10-8-1928) முதல் 6-தினங்கள், ஸ்ரீ காஞ்சீபுரத்தில் ஸ்ரீ ப்ரதிவாதி பயங்கர மடத்தின் ஆதரவில் ஒரு ஸ்ரீ வைஷ்ணவ வித்வத் ஸதஸ் நடைபெறப் போவ ஸ்ரீ வைஷ்ணவ தாக நாம் அறிகிறோம். முற்காலத்தில் நம் பூர்வாசார்யர் வித்வத்ஸபை. கள் பரமத வாதிகளுடன் சாஸ்த்ரார்த்த வாதங்களைச் செய்து பரமதங்களை யுக்தி பூர்வகமாகவும் ப்ரமாணங்களுக்கு ஒத்தும் கண்டநங்களைச் செய்து வந்தார்களென்றும், இக்காலத்தில் வாதம் செய்வது என்பதே லுப்தமாகி விட்டபடியால் அப்படி வாதம் செய்யும் சக்தி மிக்கக் குறைவை அடைந்து விட்டதென்றும், அப்படி மழுங்கிக் கிடக்கும் இந்தச் சக்தியை மறுபடியும் தலையெடுக்கும்படி செய்வதே இந்த வித்வத் ஸபையின் முக்ய நோக்க மென்றும், அந்த ஸபையின் ப்ரவர்த்தகர்கள் சொல்லுகிறார்கள். ஆகையால், வாத கோஷ்டிகளே இந்த ஸபையில் ப்ரதாநமான அம்சமாக நிற்கும்; உபந்யாஸங்களும் உபஸர்ஜ்ஜநமாக நடைபெறுமாம். இதில் அந்வயிக்கும் வித்வாங்களெல்லாருக்கும் ஸம்மாநங்கள் கொடுக்கப்படுமென்றும் ப்ரசுரம் செய்யப்பட்டிருக்கின்றது. வித்வஜ் ஜநங்களுக்குள் வைதுஷ்யத்தை வ்ருத்தி செய்யும் விஷயத்தில், இவையெல்லாம் உசிதமான உபாயங்களே. வைதுஷ்யத்தின் அபிவ்ருத்தி ஜநோபகாரமான தால், அது ஸத்கார்யமாகும் என்பதில் ஆக்ஷேபமில்லை. இம்மாதிரி ஜநோபகாரகங்களான ஸத் கார்யங்களை நடத்திவைக்கும் ஆஸ்திகர்களின் விஷயத்தில் ஸ்ரீ சரண்யன் அநுக்ரஹத்தைச் செய்து அந்தக் கார்யங்களை நிர்விக்நமாக நிறைவேற்றி வைக்க வேண்டுமென்று நாம் ப்ரார்த்திக்கின்றோம்.



கஂசநார்த்தவிசேஷம் ப்ரதி ஸித்திரூபத்வாத் ஜ்ஞாநஸ்ய த்ரைரூப்யவிரஹே பவதாம் ஸ்வரூபபூதஜ்ஞாநவந் நிவர்த்தகஜ்ஞாநஸ்யாபி அநிவர்த்தகம் ஸ்யாத் । ப்ரஹ்மஸ்வரூபஸ்யைவ ஜ்ஞாத்ருத்வாப்யுபகமே ஸ்வகீய ஏவ பக்ஷ: பரிக்ருஹீத: ஸ்யாத் । நிவர்த்தகஜ்ஞாந ஸ்வரூப ஜ்ஞாத்ரு-

---

யாநிவ்ருத்திக்கு யோக்யதை யற்றது என்று ஒத்துக்கொண்டிருப்பது போல இந்த ஜ்ஞாநத்தையும் நிவர்த்தகமாக இருக்க அநர்ஹம் என்று சொல்லவேண்டி வரும். 'ப்ரஹ்ம ஸ்வரூபத்திற்கே ஜ்ஞாத்ருத்வத்தை அங்கீகரிக்கிறோம்' என்று சொல்லும் பக்ஷத்தில், எங்கள் பக்ஷத்தை நீங்களும் பரிக்ரஹித்ததாகி விடும். 'நிவர்த்தக ஜ்ஞாநத்தைக் குறித்து ஏற்படும் ஜ்ஞாத்ருத்வம், அந்த நிவர்த்தக ஜ்ஞாநத்தால் நிவ்ருத்திக்கப்

---

ஜ்ஞாநத்வமேவ ஹீயேத—இந்த மூன்று அம்சங்களை ஒத்துக் கொள்ளாவிட்டால் ஜ்ஞாநத்திற்கு ஜ்ஞாநத்தன்மையே நஷ்டமாகிவிடும்.

ஸித்திரூபத்வாத்—ப்ரகாசரூபத்வாத்। ஜ்ஞாநம் என்பது ப்ரகாச ரூபம். அதாவது, ஒருவனுக்கு ஒரு அர்த்த விசேஷத்தை ப்ரகாசிப்பதே ஜ்ஞாநம் என்று சொன்னதாயிற்று. ஆகையால், மூன்று அம்சங்களும் அதில் இருக்கின்றன.

த்ரைரூப்யவிரஹே—அந்த மூன்று அம்சங்கள் இல்லாவிட்டால். ஸ்வரூப பூத ஜ்ஞாநத்திற்கு மூன்று அம்சங்களில்லை யாதலால் அதற்கு அவித்யையை நிவ்ருத்திப்பிக்க யோக்யதை இல்லை என்று நீங்கள் சொல்வது போல, ப்ரமாண ஜந்ய ஜ்ஞாநத்திற்கும் மூன்று அம்சங்கள் இல்லையென்று சொல்லும் பக்ஷத்தில் அவித்யையை நிவ்ருத்திப்பிக்கும் யோக்யதை அதற்கும் இராமல் போகும்படி ஸம்பவிக்கும். அது அநிஷ்டம். ஆகையால் ப்ரமாண ஜந்ய ஜ்ஞாநம் எல்லாவற்றிற்கும் த்ரிரூபத்வம் உண்டு என்று ஏற்படுகிறது.

ஸ்வகீய: பக்ஷ:—நம்முடைய பக்ஷம். ப்ரஹ்ம ஸ்வரூபத்திற்கே ஜ்ஞாத்ருத்வமும் உண்டு என்பது விசிஷ்டாத்வைதிகளின் மதம்.

ஸ்வநிவர்த்யாந்தர்கதம் — தன்னால் நிவர்த்திப்பிக்கத் தகுந்தவைகளுள் இந்த ஜ்ஞாத்ருத்வமும் உள்ளடங்கியது. அதாவது, அவித்யை முதலானவை அந்த நிவர்த்தக ஜ்ஞாநத்தால் நிவர்த்திக்கப்படுவது போல, நிவர்த்தக ஜ்ஞாநத்தைக் குறித்து ஏற்படும் ஜ்ஞாத்ருத்வமும் அந்த நிவர்த்தக ஜ்ஞாநத்தாலேயே நிவர்த்திக்கப்படுகின்றது என்று சொன்னதாயிற்று.

[illegible]

[illegible]?

படும் பதார்த்தங்களுள் அந்தர்பூதம்' என்று சொல்வதானது, 'பூதலத்தைத் தவிர மற்றை ஸகல பதார்த்தங்களும் தேவதத்தனல் வெட்டப்பட்டது' என்று சொல்லும் பொழுது வெட்டும் வ்யாபாரமும் வெட்டுகிறவனுடைய வெட்டும் தன்மையும், வெட்டு தலுக்குத் தகுந்த மற்றை பதார்த்தங்கள் போல வெட்டும் வ்யாபாரத்தில் அடங்கியுள் ளன' என்று சொல்வது போல உபஹஸிக்கத் தகுந்ததே.

[illegible]......... [illegible]—ஸகல பேதங்களையும் போக்கடிக்கக்கூடிய 'எல்லாம் ஒன்றே' என்னும் ஜ்ஞாநம் எதனுல் உண்டாகின்றது? என்பதை விசாரிக்க

[illegible]—'பூ ப்ரதேசம் நீங்கலாக மற்றை ஸகலமும் வெட்டுப் பட்டுப்போய் விட்டது' என்றும் சொல்லும்பொழுது, 'மற்றை ஸகலமும்' என்பதால் மற்றை ஸகலமான வெட்டப்படக்கூடிய பதார்த்தங்களன்றே க்ரஹிக்கக் கூடியவை? அப்படி க்ரஹிக்காமல், 'ஸகலமும்' என்னும் சப்த பலத்தால் தேவதத்த வ்யதிரிக்தமான சேத்ருத்வம் (வெட்டுகிறவனுடைய வெட்டும் தன்மை) சேதந க்ரியை (வெட்டும் வ்யாபாரம்) இவைகளையும் க்ரஹிப்பது உபஹாஸ்யமாகாதோ? அம்மாதிரியே, நிவர்த்தக ஜ்ஞாநத்தில் நிவர்த்தகத்வம் இருக்கின்றது என்னும் பலத்தை அவலம்பித்து, அந்த நிவர்த்தக ஜ்ஞாந ஸ்வரூப ஜ்ஞாத்ருத்வமும் அந்த ஜ்ஞாநத்தால் நிவ்ருத்திக்கப்படுகின்றது என்று சொல்வது உபஹாஸ்யமாகும் என்பது தாத்பர்யம்.

[illegible]—இதுவரையில் ஜ்ஞாத்ரநுபபத்தி நிரூபிக்கப்பட்டது. இப்பொழுது ஸாமக்ரி அநுபபத்தி என்னும் அநுபபத்தியை நிரூபிக்கிறார். 'எல்லாம் ஒன்றே; நம்மால் காணப்படும் பேதமெல்லாம் பொய்' என்பதன்றே அத்வைதிகளின் முக்ய கொள்கை. 'இந்த ஜ்ஞாநம் எதனுல் ஏற்படுகின்றது?' என்பதை விசாரிக்கப் புகுந்தால், 'இதனுல் ஏற்படுகின்றது' என்று சொல்வது ஸாத்யமில்லை என்பது தான் இவ்விடத்திற் சொல்லப்படும் ஸாமக்ரி அநுபபத்தி. இந்த ஜ்ஞாநம் எதனுல் உண்டாகின்றதோ, அது அந்த ஜ்ஞாநத்திற்கு ஸாமக்ரீ ஆகிறபடியால், இதை ஸாமக்ரி அநுபபத்தி என்று வ்யவஹரிக்கிறார்கள். '[illegible]' போன்ற ச்ருதி வாக்யங்கள் இந்த ஜ்ஞாநத்தை உண்டுபண்ணுகின்றன; இந்த ஜ்ஞாநம் பேத ஜ்ஞாநத்தைப் போக்கடிக்கின்றது' என்பது அத்வைதிகளின் வாதம். 'அந்த ச்ருதி வாக்யங்கள் அவித்யா பரிகல்பிதங்களாகையால், அவைகளால் ஏற்படும் ஜ்ஞாநம் ப்ரமாணமாக மாட்டாது; அதற்கு மற்றொரு தவறுதலான ஜ்ஞாநத்தைப் போக்கடிக்க யோக்யதை இல்லை என்பது இவ்விடத்திற் செய்யப்படும் ஆக்ஷேபம்.



[illegible]

வேண்டும். 'வேதத்தினுலேயே அந்த ஜ்ஞாநம் உண்டாகின்றது' என்று சொல்வது பொருந்தமாட்டாது. வேதம் என்பது ப்ரஹ்மத்தைக் காட்டிலும் வேறுபட்ட வஸ்து; ஆகையால் அவித்யையினுல் அது கல்பிதம்; அந்தக் காரணத்தால் அது, 'ப்ரபஞ்சம் ஸத்யம்' என்னும் ப்ரமத்தை நிவ்ருத்திப்பிக்கத்தகுந்த ஒரு ஜ்ஞாந விசேஷத்தை உண்டு பண்ணுவதற்கு அநர்ஹமே. அப்படியே த்ருஷ்டாந்தத்தாலும் நிரூபிக்கலாம். ஏதோ

[illegible]—'எல்லாம் ஒன்றே, எல்லாம் ப்ரஹ்மமே' என்னும் ஜ்ஞாநம் ஏற்பட்டால், ப்ரபஞ்சத்தில் வெவ்வேருகத் தென்படும் பதார்த்தங்களுடைய பேத ஜ்ஞாநம் போய் விடும். ஆகையால், ஐக்ய ஜ்ஞாநம் பேதத்தை (அதாவது—பேத ஜ்ஞாநத்தை) நிவ்ருத்திப்பிக்கின்றது என்று சொல்லப் படுகின்றது. நிவ்ருத்திப்பிக்குமது 'நிவர்த்தகம்' என்றும், நிவ்ருத்திப்பிக்கப்படுவது 'நிவர்த்யம்' என்றும் வ்யவஹரிக்கப்படும். இவைகளை 'பாதகம்' 'பாத்யம்' என்று வ்யவஹரிப்பதுமுண்டு.

[illegible]—அத்வைதிகள் சொல்லுகிறபடி 'ப்ரஹ்மம் ஒன்றுதான் உண்டு; ப்ரஹ்மத்தைக் காட்டிலும் வேறுபட்டவை போல் தோன்றுமவையெல்லாம் அவித்யையால் கல்பிதங்கள். ஆகையால் அவை அபரமார்த்தங்கள்' என்பது உண்மையானுல், ச்ருதி, ப்ரஹ்மத்தைக் காட்டிலும் வேறுபட்டதாகையால், அது அபரமார்த்தமென்று ஆகும். அப்படி ஸ்வயமே அபரமார்த்தமாயிருப்பது, எப்படி மற்றொரு ப்ரமத்தை நிவ்ருத்திப்பிக்கும்? என்பதுதான் இவ்விடத்தில் கேட்கப்படும் கேள்வி.

[illegible]—தோஷத்தால் ஏற்படும் ஜ்ஞாநத்தை துஷ்ட காரண ஜந்யமென்று சொல்வார்கள். காமாலையால் வஸ்துக்கள் மஞ்சள் வர்ணமுள்ளவை போலத் தோன்றும் பொழுது 'வஸ்துக்கள் மஞ்சள் வர்ணமுள்ளவை' என்று காமாலைக் காரனுக்குத் தோன்றும் ஜ்ஞாநம் துஷ்ட காரண ஜந்யம். அவித்யையால் நமக்கு ப்ரபஞ்சத்தில் பேதம் தென்பட்டால் அந்தப் பேத ஜ்ஞாநம் துஷ்டகாரண ஜந்யம். இம்மாதிரி துஷ்ட காரண ஜந்யமாயிருக்கும் ஜ்ஞாநம் அப்படி துஷ்ட காரண ஜந்ய மல்லாத ஜ்ஞாநத்தால் பாதிக்கப்படுமே தவிர, மற்றொரு துஷ்ட கா[illegible]த்தால் பாதிக்கப்பட மாட்டாதன்றே?

186785

தோஷகாரணஜந்யஸ்ய 'ரஜ்ஜுரியம், நாயம் ஸர்ப்ப:' இதி ஜ்ஞாநேந பாத்யத்வே; ரஜ்ஜுஸர்ப்பஜ்ஞாநபயே வர்த்தமாநே கேநசித் ப்ராந்தேந புருஷேண 'ரஜ்ஜுரியம், நாயம் ஸர்ப்ப:' இத்யுக்தேऽபி 'அயம் ப்ராந்த:' இதி ஜ்ஞாதே ஸதி தத்வசநம் ரஜ்ஜுஸர்ப்பஜ்ஞாநஸ்ய பாதகம் ந பவதி, பயம் ச ந நிவர்த்ததே; ப்ரயோஜநஜ்ஞாநவத: ச்ரவணவேளாயாமேவ ஹி ப்ரஹ்மவ்யதிரிக்தஸ்ய க்ருத்ஸ்நஸ்ய ப்ராந்திமூலத்வம் ஜ்ஞாதமிதி! நிவர்த்தகஜ்ஞாநஸ்ய ஜ்ஞாது: ஜ்ஞாத்ருத்வஸ்வரூபஸ்ய ச ப்ரஹ்மவ்யதிரிக்ததயா யதி பாத்யத்வமுச்யதே, ஹந்த! தர்ஹி ப்ரபஞ்சநிவ்ருத்தே: மித்யாத்வா

---

ஒரு தோஷதுஷ்ட காரணமடியாக ஒருவனுக்கு ஒரு கயிற்றில் 'இது பாம்பு' என்னும் ப்ரமம் ஏற்பட்டிருந்தால், அம்மாதிரியான தோஷ துஷ்ட காரணமடியாகவே 'இது பாம்பன்று, கயிறே' என்னும் ஒரு எண்ணம் பிறகு அவனுக்கு ஏற்பட்டபோதிலும், இந்த எண்ணத்தால் முதல் ப்ரமம் நிவ்ருத்தியாக மாட்டாதன்றோ? கயிற்றைப் பார்த்து பாம்பென்று ப்ரமித்து பயந்திருக்கும் ஒருவனுக்கு, 'இது பாம்பன்று; கயிறே' என்று மற்றொருவன் போதித்த போதிலும், 'அவனும் ப்ரமத்தால் அவ்விதம் போதிக்கின்றான்' என்னும் எண்ணம் அவனுக்கு இருக்கும் பக்ஷத்தில், அந்தப் போதநம் அவனுடைய ப்ரமத்தையும் நிவ்ருத்திப்பிக்கமாட்டாது; பயத்தையும் போக்கடிக்க மாட்டாது. அம்மாதிரியே ப்ரக்ருதத்திலும். வேதம் போதிப்பதை நாம் கேட்கும் காலத்திலேயே, 'வேதம் ப்ரஹ்மத்தைக் காட்டிலும் வேறுபட்டது. ஆகையால், அவித்யையால் கல்பிதம், பொய்யே' என்னும் ஜ்ஞாநம் இருக்கின்றதாகையால், வேதம் போதிப்பது நம்முடைய ப்ரமத்தை நிவ்ருத்திக்கமாட்டாது. ஒருகால், 'வேதம், அதனால் ஏற்படும் ஜ்ஞாநம், அந்த ஜ்ஞாநத்தைப் பெறுகிறவன் இவையெல்லாம் ப்ரஹ்மத்தைக் காட்டிலும் வேறுபட்டவை' என்னும் காரணத்தைக்கொண்டு, 'அவைகள் ப்ரமாணங்களல்ல, மற்றென்றால் பாதிக்

---

ப்ரயோஜகஜ்ஞாநவத:—'இந்த வஸ்து ப்ரஹ்மத்தைக் காட்டிலும் வேறுபட்டது? ஆகையால் இது பொய்' என்னுமிடத்தில், 'இது பொய்' என்பதற்கு ப்ரஹ்மத்தைக் காட்டிலும் வேறுபட்டதாயிருக்கும் தன்மை ப்ரயோஜகமாகின்றது. அப்படி 'அதற்கு இது ப்ரயோஜகம்' என்னும் ஜ்ஞாநம் ஒருவனுக்கு இருந்தால், அவன், ப்ரஹ்மத்தைக் காட்டிலும் வேறுபட்டதாயிருக்கும் ச்ருதி சொல்வதை நம்ப மாட்டான். அவன் விஷயத்தில், ச்ருதி போதிக்கும் ஐக்ய ஜ்ஞாநம் எப்படி 'ப்ரபஞ்சம் பிந்நம்' என்னும் ஜ்ஞாநத்தைப் பாதிக்கும்?

ஶாஸ்த்ரஸ்ய யதி பாத்யத்வமுச்யதே—அத்வைதிகள் ப்ரபஞ்சத்தைப் பாத்யமென்றும் சாஸ்த்ரத்தைப் பாதகமென்றும் சொல்லி வந்தார்கள். அப்படிச் சாஸ்த்ரத்திற்குப் பாத்யத்வம் சொல்வது அநுபபந்நம் என்பது இதுவரையில் நிரூபிக்க



வேதீதி ப்ரபஞ்சஸ்ய ஸத்யதா ஸ்யாத்; ஸ்வப்நத்ருஷ்டபித்ராதிமரணஸ்ய மித்யாத்வேந பித்ராதிஸத்யதாவத் | தத்த்வமஸ்யாதிவாக்யம் ச ப்ரபஞ்சஸ்ய பாதகம், ப்ராந்திமூலத்வாத், ப்ராந்தபுருஷோக்த ரஜ்ஜுஸர்ப்பபாதகவாக்யவத் |

---

கத் தகுந்தவைகளே' என்று நீங்கள் சொல்லும் பக்ஷத்தில், அப்பொழுது ப்ரபஞ்ச நிவ்ருத்தியே பொய்யாகி விடுமானதால் 'ப்ரபஞ்சம் ஸத்யமே' என்று ஒத்துக்கொள்ளும்படி நேரும். ஸ்வப்நத்தில் தனது பிதா மரித்துவிட்டதாகக் கேட்ட ஒருவனுக்கு, பிறகு 'நான் கண்டது ஸ்வப்நம், ஆகையால் அது பொய்' என்னும் ஜ்ஞாநம் ஸம்பவித்தால், அதனால் அவனுக்கு 'பிதா ஸத்யமே' என்னும் உறுதி ஏற்படுகின்றதன்றோ? ஆகையால், தத்த்வமஸி (நீ அதுவே) என்பது முதலான ச்ருதி வாக்யங்கள், 'ப்ரபஞ்சம் ஸத்யம்' என்பதைப் பாதிக்கமாட்டா; ச்ருதி வாக்யங்கள் ப்ராந்தி மூலங்களல்லவோ? 'இது பாம்பன்று கயிறே' என்னும் ப்ராந்தனுடைய வார்த்தை இதற்கு நிதர்சநம்.

---

பட்டது. இப்பொழுது, ஒருகால் சாஸ்த்ரத்திற்குப் பாத்யத்வத்தை அத்வைதிகள் சொல்வார்களோ என்று சங்கித்து, அப்படி அவர்கள் சொன்னால் அவர்களுக்குப் பெருத்த அநிஷ்டம் நேரும் என்று சொல்லுகிறார். 'ப்ரபஞ்சம் பொய்' என்று சாஸ்த்ரம் சொல்லுகிறதாகையால், அந்தச் சாஸ்த்ரம் பாத்யமாகப் போய்விடும் பக்ஷத்தில், 'ப்ரபஞ்சம் பொய்' என்பது பொய்யாகிவிடும்; அதாவது 'ப்ரபஞ்சம் ஸத்யம்' என்று சொன்னதாகி விடும். அது அத்வைதிகளுக்கு அநிஷ்டமே. பித்ரு மரணம், பிதா ஜீவித்திருப்பது இரண்டும் பரஸ்பரம் விருத்தம்; பித்ரு மரணம் ஸ்வப்ந ஜ்ஞாநமாக இருந்து அந்தக் காரணத்தால் பாத்யமாகி விட்டால், பிதா ஜீவித்திருக்கிறான் என்னும் ஜ்ஞாநம் ஏற்படுகின்றதன்றோ? இது இவ்விடத்தில் த்ருஷ்டாந்தம்.

பித்ராதிஸத்யதாவத்—'பிதா மரித்துவிட்டார்' என்பது ஸ்வப்நத்தில் ஏற்பட்ட ஜ்ஞாநமாகவிருந்தால் அது பாத்யமாகி விடுகின்றது. அப்படி அது பாத்யம் என்று அறிந்தவுடன், 'பிதா மரிக்கவில்லை, அதாவது இருக்கிறார்' என்னும் ஜ்ஞாநம் ஸம்பவிக்குமே தவிர, 'பிதா ஸத்யம்' என்னும் ஜ்ஞாநம் எப்படி ஏற்படும்? 'பிதா முதலியவர்களின் ஸத்யத்தன்மை போல' என்று எப்படி இவ்விடத்தில் சொல்லப்பட்டிருக்கிறது? இவ்வாறு இவ்விடத்தில் ஒரு சோத்யம் செய்யக்கூடும். 'பிதா இருக்கிறார்' என்னும் ஜ்ஞாநம் மற்றொன்றால் பாதிக்கப்படாமலிருக்கும் வரையில், 'பிதா ஸத்யம்' என்று சொல்வதற்கு ஆக்ஷேபமென்ன? என்பது ஸமாதாநம்.

நநு ச ஸ்வப்நே கஸ்மிம்ஸ்சித் வர்த்தமாநே ஸ்வப்நதர்சநாயாமேவ 'அயம் ஸ்வப்ந:' இதி ஜ்ஞாதே ஸதி பயநிவ்ருத்தி த்ருஷ்டா, தத்வத் அத்ராபி ஸம்பவதீதி । நைவம் । ஸ்வப்நவேலாயாமேவ 'ஸோऽபி ஸ்வப்ந:' இதி ஜ்ஞாதே ஸதி புநர்பயாநிவ்ருத்திரேவ த்ருஷ்டேதி ந கச்சி

---

நந்வ............உக்தம்—'ப்ராந்தி மூலமாயிருந்த போதிலும், சில ஜ்ஞாநங்கள் பூர்வம் ஸம்பவித்திருந்த ப்ரமத்தை நிவ்ருத்திக்கின்றன. ஸ்வப்நத்தில் ஒருவன் ஏதாவதொரு பய ஹேதுவைக் கண்டு பயந்திருக்கும் பொழுது, அந்த ஸ்வப்ந காலத்திலேயே 'இது ஸ்வப்நம்' என்னும் ஜ்ஞாநம் அவனுக்கு ஜநிக்கும் பக்ஷத்தில், முன் ஏற்பட்டிருந்த பயம் நிவ்ருத்தியாவதை நாம் பார்த்திருக்கிறோமே. அது போல ப்ராந்தி மூலமாயிருக்கும் ச்ருதியினால் ஏற்படும் ஜ்ஞாநமும், 'ப்ரபஞ்சம் ஸத்யம்' என்னும் ப்ரமத்தைப் போக்கடிக்கக்கூடும்' என்னில், அது யுக்திக்குப் பொருந்தமாட்டாது. அந்த ஸ்வப்ந காலத்திலேயே 'இதுவும் ஸ்வப்நம்' என்று பிறகு அறியப்படும் பக்ஷத்தில் மறுபடியும் பயம் திரும்பி வருவதையும் நாம் பார்க்கிறோமன்றோ? ஆகையால், பாதிக்கும்

---

நநு—'ப்ராந்தி மூலமாக ஏற்படும் ஜ்ஞாநமும், சில விடங்களில் நிவர்த்தகமாவதை நாம் பார்த்திருக்கிறோமே' என்று த்ருஷ்டாந்தத்தைக் கொண்டு ஒரு ஆக்ஷேபம் இவ்விடத்தில் செய்யப்படுகின்றது. ஒருவன் ஸ்வப்நத்தில் ஒரு பயஹேதுவைக் காண்கிருன்; அந்த ஸ்வப்நத்திற்குள்ளேயே 'தான் கண்டது ஸ்வப்நம்' என்று அவனுக்கு ஜ்ஞாநம் ஜநித்தால், அந்தப் பயம் நிவ்ருத்தியாகி விடுவதை நாம் அறிவோம். முதல் ஸ்வப்நத்திற்கு இரண்டாவது ஸ்வப்நம் பாதகமாகி விடுகின்றது. இப்படி இரண்டாவது ஸ்வப்நம் ஸ்வப்நமாக இருக்கையிலும், அதாவது ப்ராந்தி மூலமாக இருக்கையிலும், அதற்கு நிவர்த்தகத் தன்மை ஏற்படுவது போல, ச்ருதி ப்ராந்தி மூலமாக இருந்தாலும், அதற்கு ப்ரபஞ்ச பேத நிவர்த்தகத்வம் உண்டாகக்கூடும் என்பதுதான் ஆக்ஷேபம். 'அதற்கு ஏற்படும் நிவர்த்தகத்வம் சரியான நிவர்த்தகத்வமன்று; ஏனென்றால், அதுவும் நிவர்த்யமாகி விடும்' என்பது அதற்குச் சொல்லப்படும் ஸமாதாநம். எப்படியென்றால், அதே ஸ்வப்நத்திற்குள், 'இது ஸ்வப்நம் என்று அவனால் காணப்பட்ட இரண்டாவது ஸ்வப்நமும் ஸ்வப்நமே' என்று ஜ்ஞாநம் ஏற்படும் பக்ஷத்தில், பூர்வம் நிவர்த்தகமாயிருந்த இரண்டாவது ஸ்வப்நம் இப்பொழுது நிவர்த்யமாயும், மூன்றாவது ஸ்வப்நம் அதற்கு நிவர்த்தகமாயும் ஆகிவிடுமன்றோ? ஆகையால், இவ்விடத்தில் சொல்லப்படும் நிவர்த்யம் நிவர்த்தகம் (அதாவது—பாத்யம் பாதகம்) இவை இரண்டுக்கும் ஒருவித வாசியுமில்லை. 'ந கச்சித் விசேஷ:'



த்விசேஷ: । ச்ரவணவேலாயாமேவ 'ஸோऽபி ஸ்வப்ந:' இதி ஜ்ஞாதத்வாத் வேதாந்தஜஸ்ய ।

யதபி அத்ரோக்தம் 'ப்ராந்தி பரிகல்பிதத்வேந மித்யாத்வேऽபி சாஸ்த்ரம் ஸதத்விதீயம் ப்ரஹ்மேதி போதயதி; தஸ்ய ஸதோ ப்ரஹ்மணோ விஷயஸ்ய பச்சாத்தநபாதாதர்சநாத் ப்ரஹ்ம ஸத்யமேவ' இதி தத் அயுக்தம் । 'சூந்யமேவ தத்த்வம்' இதி வாக்யேந தஸ்யாபி பாதிதத்வாத் । 'இதம் ப்ராந்தி மூலவாக்யம்' இதி சேத் 'ஸதத்விதீயம் ப்ரஹ்ம' இதி வாக்யமபி ப்ராந்தி மூலமிதி த்வயைவோக்தம் । பச்சாத்தநபாதாதர்சநம் து ஸர்வசூந்யவாக்யஸ்யைவேதி விசேஷ: । ஸர்வசூந்யவாதிநோ

---

ஸ்வப்நத்திற்கும் பாதிக்கப்படும் ஸ்வப்நத்திற்கும் எவ்வித வாசியுமில்லை. ப்ரக்ருதத்திலும், ச்ருதி வாக்யங்களைக் கேட்கும் காலத்திலேயே 'அவை ஸ்வப்நங்கள் போல ப்ராந்தி மூலங்கள்' என்பது அறியப்பட்டதாக என்றே சொல்லப்பட்டிருக்கின்றது.

யதபி............சூந்யவாதிந இதி—'ச்ருதியாகிற சாஸ்த்ரமானது ப்ராந்தியினால் ஏற்பட்டு அந்தக் காரணத்தால் அது பொய்யென்று சொல்லத் தகுந்ததாக இருந்தபோதிலும், 'அது போதிக்கும் ப்ரஹ்மம் நிர்விசேஷ வஸ்து' என்னும் விஷயம் உறுதியே என்று சொல்லக்கூடும்; ஏனென்றால், அப்படி அது போதிக்கும் விஷயம் பிறகு ஒன்றாலும் பாதிக்கப்படவில்லை யன்றோ? ஆகையால் ப்ரஹ்மம் ஸத் என்றும் அது நிர்விசேஷமென்றும் ச்ருதி சொல்வது நம்பத் தகுந்ததே' என்று வாதிப்பதும் அயுக்தமேயாகும். 'தத்வம் சூந்யமே' என்னும் ஸர்வ சூந்யவாதிகளின் வாக்யம் அதைப் பாதிக்கின்றதன்றோ? 'அது ப்ராந்தி மூலமான வாக்யம்' என்னில், 'ப்ரஹ்மம் ஸத், அது நிர்விசேஷம்' என்னும் வாக்யமும் ப்ராந்தி மூலமென்று உன்னாலேயே சொல்லப்பட்டிருக்கின்றது. பிறகு ஒன்றாலும் பாதிக்கப்படாமலிருப்பதானது ஸர்வம் சூந்யம் என்பதைச் சொல்லும் வாக்யத்துக்கு மாத்ரம் என்பதுதான் இரண்டு வாக்யங்களுக்குமுள்ள வாசி. ஸர்வம் சூந்யம் என்று வாதிப்பவர்களும் ப்ரஹ்மத்தைத் தவிர்த்த மற்ற வஸ்துவெல்லாம் பொய்யென்று வாதிப்பவர்களும், இரண்டு வாதிகளும் 'தங்களுடைய வாதத்தை ஸாதித்துக் கொடுக்கும் ப்ரமாணம் பாமார்த்தமன்று,

---

சூந்யமேவ தத்த்வம்—'எல்லாம் சூந்யம்' என்று சொல்வார் பௌத்தர்கள்; 'ப்ரஹ்மத்தைத் தவிர்த்த மற்றவை யெல்லாம் பொய்' என்று சொல்வார் அத்வைதிகள். 'ப்ரஹ்மத்தைக் காட்டிலும் வேறு பட்டதான ச்ருதி பொய் என்னும் அம்சத்தில் இரண்டு பெயர்களுக்கும் விசேஷமில்லை,

ப்ரஹ்மவ்யதிரிக்தவஸ்த்வபாவவாதிநஸ்ஸ்வபக்ஷஸ்தாபநாய ப்ரமாணவாக்யஸ்ய ஸமர்த்தநம் அபியுக்தைர் வாதாநதிகார ஏவ ப்ரதிபாதித: ।

"ஸர்வதா ஸத்யஸாதநவாதிநாம் வாதேऽதிகார: ப்ரஸஜ்யதே ।
அதிகாரோऽஸத்யஸாதநத்வாத் ந வாதே சூந்யவாதிந: ॥"

இதி ।

---

அது பொய்யே' என்று ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். அப்படி தங்களுடைய அபிமதார்த்தத்தை ஸாதித்துக்கொடுக்கும் ப்ரமாணம் அபரமார்த்தமென்று ஒத்துக்கொள்பவர்களாற் செய்யப்படும் வாதம் நிஷ்ப்ரயோஜநமே என்று பெரியோர்கள் அநுக்ரஹித்திருக்கிறார்கள். "ப்ரமாணத்தைப் பரமார்த்தமென்று ஒத்துக்கொள்பவர்களே வாதத்திற்கு அதிகாரிகள்; ப்ரமாணத்தை அபரமார்த்தமென்று சொல்பவர்களுக்கு ஒரு பொழுதும் வாதத்தில் அதிகாரமில்லை."

---

ஸ்வபக்ஷஸ்தாபநாய ப்ரமாணவாக்யஸமர்த்தநம்—இந்த இரண்டு பெயர்களும், தங்கள் தங்கள் கக்ஷியை ஸ்தாபிப்பதற்கு, ச்ருதியையே ப்ரமாணமாகக் கோருகிறார்கள்; அந்த ச்ருதியை பரமார்த்தமன்றென்றும் சொல்லுகிறார்கள். அபரமார்த்தமானதை ப்ரமாணமாகக் கொண்டு தங்கள் கக்ஷியை ஸ்தாபிக்க ப்ரயத்நப்படுமவர்களுடைய வாதம் நிஷ்ப்ரயோஜநமே.

அபியுக்தை:—பூர்வாசார்யர்கள் இவ்விதம் சொல்லியிருக்கிறார்கள்.

ஸர்வதா—இந்தக் காரிகையின் அர்த்தமாவது:— ஸத்யஸாதநவாதிநாம்—பரமார்த்தமாயுள்ள ப்ரமாணத்தை உடையவர்களுக்கே, ஸர்வதா வாதேऽதிகார: ப்ரஸஜ்யதே—எப்பொழுதும் வாதத்தில் அதிகாரமுண்டு. சூந்யவாதிந:—'ஸர்வம் சூந்யம்' என்று சொல்பவருக்கோ வென்றால், அஸத்யஸாதநத்வாத்—ப்ரமாணம் அபரமார்த்தமாகிறபடியால், ந வாதேऽதிகார:—வாதத்தில் அதிகாரமில்லை, அதாவது—அவர்களுடைய வாதம் நிஷ்ப்ரயோஜந மென்று சொன்னதாயிற்று. இவ்விடத்தில் 'சூந்யவாதிந:' என்று ஸர்வ சூந்யவாதிகள் ப்ரஸ்தாவிக்கப்பட்டிருந்த போதிலும், 'ப்ரஹ்மத்தைத் தவிர்த்த மற்றவை யெல்லாம் பொய்' என்று சொல்லும் அத்வைதிகளும் க்ரஹிக்கப்படுகிறார்கள்; ந்யாயம் இரண்டு பெயருக்கும் துல்யமே.



---

ஸ்துத்வா—ஸ்தோத்ரம்பண்ணி, கிங்கரோऽஸ்மீதி ச வதேத்—உனக்குத் தொண்டுபட்டிருக்க வேணுமென்று மிட்டடியாக, தேவாய—எம்பெருமான் பொருட்டு, நிவேதயேத்—ஆத்மஸமர்ப்பணம் பண்ணக் கடவன்.

உத்தமாதிகாரீ—இதில் ஓடின பாவ வ்ருத்தி இன்றிக்கே ஒழிந்தவனுக்கு இப் பாசுரத்தை நாடோறும் படித்து, அடியேனாக வேணுமென்று ஆத்ம ஸமர்ப்பணத்தைப் பண்ணுவான்.

உத்தமம்—'இதி' என்றும் 'வதேத்' என்றும் அர்த்தத்தினுடையவும் சப்தத்தினுடையவும் ஸ்வரூபம் சொல்லுகிறது. இத்தால் அல்லாத 'ஜிதந்தை'களிற்காட்டில் இதுக் குண்டான ஏற்றம் சொல்லுகிறது.

ஸதயா ஸ்துத்யா—'ஜிதந்த இதி மந்த்ரேண' என்று ப்ரதேசாந்தரத்திலே மந்த்ரமாகச் சொல்லிற்று; இங்கு ஸ்தோத்ரமாகச் சொல்லிற்று; இதுக் கடி என்னென்னில்: "மநநாத் த்ராயத இதி மந்த்ர:" என்கிறபடியே அநுஸந்தாதாவை உத்தரிப்பிக்கு மென்றிட்டு மந்த்ர மென்கிறது. ஸ்தவ்யனுப் ஸ்தவப்ரியனான ஈச்வரன் திருச்செவி சாற்றினால் முகமலரும தாகையாலே ஸ்தோத்ர மென்கிறது.

தேவம்—என்று "ஸாக்ஷாத்தேவ: புராணோऽஸௌ" என்று நிருபாதிக தேவனைச் சொல்லக் கடவதிறே; திநே திநே—அர்த்த ஜ்ஞாந முடையவனுக்கு இந்த சப்தோச்சாரணம் காதாசிக்கமாகவுமாம், இந்தப் பாசுரத்தைப் பற்றுமவனுக்கு நாடோறும் உச்சரிக்க வேணும்.

---

'வதேத்' பொருளமிதின் இனிமையாலே போக்யதமமாய். 'ஸதயா' என்று ஸர்வஜ்ஞனான தனது அகம் மகிழ்ந்து வந்த வார்த்தை யாகையினாலே வக்த்ரு வைலக்ஷண்ய முள்ளதாய் அபரிமித கம்பீரமான இந்த ஸ்தோத்ரத்தினால்.

ஸ்துத்வா தேவம் திநே திநே—தினந்தோறும் ஸர்வேச்வரனை ஸ்துதித்து. திநே திநே—என்கிற இதனால் ஸ்தவப்ரியனான ஈச்வரனுக்கு ஸ்ரீஸஹஸ்ரநாமாதிகளைக் காட்டிலும் இது அத்யந்தாபிமத மென்றதாயிற்று.

கிங்கரோऽஸ்மீதி சாத்மாநம் தேவாயைவம் நிவேதயேத்—அடியேன் அநாதிகாலமாகச் செய்த ஆத்மாபஹார சௌர்யத்தினால் உண்டான அபராதங்களெல்

8

கிංகரொஸ்மீத்யாதி—நான் இங்கரனாக வேணு மென்று ஸர்வேச்வரன் திருவடிகளிலே ஆத்ம ஸமர்ப்பணம் பண்ணுவான். இவ்வித அநுஷ்டாநத்துக்கு ப்ரயோஜந மென்னென்னில், விலக்ஷணராயிருப்பார் சொன்ன பாசுரத்தைத் தேஹாத்மாபிமாநிகள் சொன்னாலும், அவர்களை நினைத்து, அவர்களைப் போலே ஈச்வரன் விஷயீகரிக்கு மென்று கருத்து. எது போல வென்னில், ஒரீற்று நல்ல கன்றிட்டுக் கறந்த பசு, பின்பு அசல் கன்றிட்டாலும் மறைத்துத் தோற்கன்றை மடுவிக்க, பின் புத்தைக் கன்றையே நினைத்துப் பால் சுரக்குமாப் போலே.

ஸ்ரீ பெரியவாச்சான் பிள்ளையின்

ஜிதந்தே வ்யாக்யாநம் முற்றிற்று.

லாம் தீர்ந்து 'ஒழிவில் காலமெல்லா முடனாய் மன்னி வழுவிலா வடிமை செய்து வாழவேணு' மென்று ஆத்மாவை ஸமர்ப்பிக்க வேண்டியது. இங்கு கீழ்ச் சொன்னபடியே பர ஸமர்ப்பணாதிகளும் அந்தர்ப்பூதங்கள்.



ஸர்வேஷு தேசகாலேஷு ஸர்வாவஸ்தாஸு சாச்யுத ।
கிංகரோஸ்மி ஹ்ருஷீகேச பூயோ பூயோஸ்மி கிංகர: ॥ 15.

15. (ப—ரை) அச்யுத—ஆச்ரிதர்களை ஒருகாலும் நழுவவிடாது நோக்குமவனே! ஹ்ருஷீகேச!-இந்த்ரியங்களுக்கு நியாமகனான ஸர்வேச்வரனே! ஸர்வேஷு தேசகாலேஷு—எல்லா விடங்களிலும் எல்லாக் காலங்களிலும், ஸர்வாவஸ்தாஸு ச—சைசவாதி மரணாந்தமான எல்லா அவஸ்தைகளிலும், கிංகர: அஸ்மி—தேவரீருக்குத் தொண்டுபட்டிராநின்றேன். பூயோ பூய: கிංகரோஸ்மி—[கைங்கர்யத்திலுள்ள ஆதராதிசயத்தைக் குறித்தபடி.]

இது முதல் ஆறு ச்லோகங்கள் ப்ரதம ஜிதந்தேயில் சேர்ந்ததன்று என்று கீழே சொல்லி யிருந்தாலும், ஆந்த்ர லிபியில் அச்சிடப்பட்ட ஸ்ரீ கோசத்தில் ஷை ஆறு ச்லோகங்கள் சேர்த்து அச்சிடப்பட் டிருப்பதாலும், ஷை ச்லோகார்த்தங்கள் பூர்வ ப்ரகரணத்துக்குப் பொருந்தி யிருப்பதாலும் இங்கு வ்யாக்யாநம் செய்யப் படுகின்றன.

'உதேஷ்வ உதயாஸ்தமதா' என்கிற கீழ் ச்லோகத்தில், ஸம்ஸாரி சேதநனுக்கு நிரதிசயாநந்த மயமான மோக்ஷ ஸித்யர்த்தமாக ஆத்ம ரக்ஷாபர ஸமர்ப்பணம் சொல்லப்பட்டது. மேல் ஆறு ச்லோகங்களினால் இப்ரபந்நனுடைய காலக்ஷேபார்த்தமான நித்ய கைங்கர்யங்க ளிருக்கும் படியையும், ப்ரபந்நனுக்குப் புத்தி பூர்வமாக அபசாரங்கள் புகுந்தால் ப்ராயச்சித்தம் அவச்யம் செய்துகொள்ள வேண்டிய தென்பதையும், மேன்மேலும் இவ் வபசாரங்கள் புகுராதபடி பாபாரம்பகமான ப்ராரப்தாம்சங்களைப் பரிஹரிப்பது அவச்ய மென்பதையும், இதற்கு மேல் இப்ரபந்நனுடைய அபேக்ஷாநுகுணமாக பக்தனுக்குப்போலே பரஜ்ஞாந பரம பக்த்யாதி அநுபவங்களை இவனுக்கும் ஈச்வரன் கொடுக்கும்படியையும், பின்பு அவ்வவஸ்தையில் ப்ரஹ்மாதிகளுக்கும் நில மல்லாத ஈச்வரனுடைய பரத்வத்தைக்கண்டு அநுபவிக்கமுடியாமல் இச்சேதநன் அகன்று போம்படியையும், பிறகு அத்யந்த நீசனான தான் ஈச்வரனுக்குச் செய்த கைங்கர்யங்களைக் குற்றமாக நினைத்து க்ஷமை கொள்ளுகையையும் க்ரமமாகச் சொல்லுகின்றார்.

ஸர்வேஷு தேசகாலேஷு ஸர்வாவஸ்தாஸு சாச்யுத—இவ்வுலகத்தில் மற்றை இடங்களில் முழுவதும் பாபங்களையே செய்து உகக்கும் ப்ராக்ருத ஜநங்களும் திருவயோத்யை முதலான புண்ய க்ஷேத்ரங்களில் புகுந்தவாறே இங்கு பாபங்களைப் பண்ணலாகா தென்று பயந்தொழிந்து புண்யம் செய்து நல்ல புனலொடு

மலர்கள் தூவி நாராயணனை வணங்கிப் போவதுண்டு. அப்படியே, மற்றை நாள்களில் நன்மை செய்தறியாதவர்களும் க்ரஹணாதி புண்ய காலங்களில் தீர்த்தங்கள் தேடி யாடித் தர்மங்களைச் செய்வதுண்டு. அப்படியே, யௌவந காலங்களில் யுவதிகள் திறத்தனாய் அறத்தை மறந்து திரிந்தவர்களும், முற்ற மூத்தக் கோல் துணையா முன்னடி நோக்கி வளைந்து நிற்கு மவஸ்தை வந்தவாறே மாளுமோ ரிடத்திலாவது முகில்வண்ண னடியை யடைந்தருள் சூடி யுய்ந்து போக ஆசைப்படுவதுண்டு.

அங்ஙனன்றிக்கே, எல்லாத் தேசங்களிலும் எல்லாக் காலங்களிலும், எல்லா அவஸ்தைகளிலும், சேமமே வேண்டித் தீவினை பெருக்குத் தெரிவைமார் உருவமே மருவிப் போந்தபடியினாலே, நமன்தமர் செய்யும் வேதனைக் கொடுங்கி நடுங்கின நெஞ்சுடையனான அடியேன் அலைப்பூணுண்ணும் அவ்வல்ல லெல்லாம் அநுபவிக்காதபடி, நின்னடியிணை படைந்தடியாலே அவ்விழுவெல்லாம் தீரும்படி இனிமேல் அந்தந்த தேசங்களுக்கும் அந்தந்தக் காலங்களுக்கும் அந்தந்த அவஸ்தைகளுக்கும் பொருந்தினபடி, ஒழிவில் காலமெல்லா முடனாய் மன்னி வழுவிலா வடிமை செய்து வாழவேண்டு மென்கிறான்.

இதனால் தேசம், காலம், அவஸ்தைகள் இவைகளை அநுஸரித்து சாஸ்த்ர சோதிதமானபடியே பண்ணப்படும் கைங்கர்யமே பகவானுக்கு ஸந்தோஷ ஹேதுவாகு மென்னுமிடமும், அங்ஙனல்லாது சீதளத்தினால் வருந்துவார் மேல் சந்தநக் காப்பிடுவது போல தேச காலாதிகளுக்கு அநுகுண மல்லாமல் செய்யும் கைங்கர்யங்கள் அபசாரங்களாக முடியு மென்னுமிடமும் சொல்லித்தாயிற்று. அன்றிக்கே, ‘அஹம் ஸர்வம் கரிஷ்யாமி’ என்கிறபடியே அநாதி காலமாய் இக்கைங்கர்ய ரஸம் அனுபவிக்கப் பெறாதே பழுதே போன இழவெல்லாம் தீர, ஸர்வதேச காலாவஸ்தைகளில் ஸம்பாவிதமான தேவரீருடைய கைங்கர்யங்களில் பிறருக்குப் பங்கு கொடாதே பெருவிடாய்ப் பட்டவன் பானைநீர் முழுதும் குடிக்க ஆசைப்படுமாப் போலே அடியேன் ஒருவனுமே ஸர்வத்தையும் செய்து வாழவேணு மென்னும் ஆசைப்படுகிறான் என்று சொல்லவுமாம்.

அன்றிக்கே, இங்கு தேசகால சப்தம் சேதநனுடைய தேசகாலாவஸ்தைகளைச் சொல்லுகிறதாக்கி, ‘வஸந்தம் வர்ஷம் ஹுநம் தொயம்’ என்றும், ‘ஸர்வதா ஸர்வ ஹாரதம் ஹஸ்தை:’ என்றும் சொல்லுகிறபடியே, பரிபூர்ணமான கைங்கர்யங்களைச் செய்து உகக்க ஸௌகர்ய மில்லாத தேச காலாவஸ்தைகளிலும் தேவரீருடைய கைங்கர்ய மிழந்து பாழே போகாதபடி சிந்தையாலும் சொல்லாலும் செய்கையினாலும் யதாசக்தி கிஞ்சித்கரித்து அடியேனை உஜ்ஜீவிக்கும்படி பண்ணியருள வேணுமென்கிறான் என்னவுமாம்.



இப்பொழுது நீர் கேட்கிறபடியே நாம் உமக்குக் கைங்கர்ய ப்ரவ்ருத்தியை உண்டு பண்ணினாலும் நீர் அநாதி வாஸனையாலே மீண்டும் அவ்விஷயாநுபவத்தி லிழியமாட்டீரோ? வென்ன ; அச்யுத—ஆச்ரிதரை ஒருக்காலும் கைநழுவ விடாதவனே ! என்கிறான்.

அடியேன் தேவரீர் திருவடிகளை ஆச்ரயித்த பிறகும் இக்கைங்கர்ய ரஸாநுபவத்தை இழந்து விபரீத விஷயங்களில் புகுவதைப் பார்த்திருப்பதும் தேவரீருடைய ஆச்ரித ரக்ஷண ஸ்வபாவத்துக்குப் பொருந்துமோ என்கிறான்.

ஆனாலும், ‘வஸாநி வாஸி வஹதரணக் ஸ்வயம்ஹரு:’ என்கிறபடியே அநாதிகாலமாய் விஷயாநுபவமே ஸ்வபாவமாகப் போந்த உம்முடைய இவ்விந்திரியங்கள் நமது கைங்கர்யத்துக்கு யோக்யமாகுமோ என்ன, ஹ்ருஷீகேஶ—இவ்விந்திரியங்களுக்கு ஈசனே என்கிறான். உடையவனுக்கு இஷ்ட விநியோகார்ஹமாகாத உடைமை யுண்டோ? தேவரீர் நியமனப்படியன்றோ அவை அடியேனை இத்தனை காலம் விஷயார்ணவத்தில் அமுக்கி வைத்ததும். ஆகையினால் இப்பொழுதே அவைகளைக் கைங்கர்யோபகரண மாகும்படி நியமித்தருள வேணுமென்று ப்ரார்த்திக்கிறான்.

ஆனாலும், முன்பு ஸம்ஸார பந்தத்தைப் போக்கியருள வேணுமென்று உபாயாநுஷ்டாநம் பண்ணின நீர் இப்பொழுது மோக்ஷாபேக்ஷை பண்ணாதே இந்த ஸம்ஸாரத்திலிருந்து கைங்கர்யத்தை அபேக்ஷிப்பது உசிதமாகுமோ வென்ன, ஹஸ்யோ ஹஸ்தி கிங்கர:—தேவரீருடைய கைங்கர்ய ஸாம்ராஜ்யம் பெற்றால் இந்த ஸம்ஸாரத்திலேயே பல பிறப்பும் பிறக்கக்கடவே னென்கிறான்.

“ வாயவனை யல்லால் வாழ்த்தாது வண்கை யுலகம்
தாயவனை யல்லது தான் தொழா—பேய் முலை நஞ்
சூணாக வுண்டா னுருவொடு பேரல்லால்
காணாகண் கேளா செவி ”

என்கிறபடியே இத்தேகேந்திரியங்கள் இங்கு தேவரீர் வழிபட்டோடும்படி அருள் பெற்ற சில மஹான்கள் ‘இங்கே திரிந்தோற் கிழுக்குற்றென்’ என்றும், ‘இச்சுவை தவிரயான் போய் இந்திர லோகமாளு மச்சுவை பெறினும் வேண்டேன்’ என்றும் ‘ கூஹ்லவாவெஸ்ஸவி நமெஃஸஹிஷுரஷ:’ என்றும் பரம புருஷார்த்தத்தையும் கூட அநாதரித்துப் போகவில்லையோ வென்கிறான்.

யத்யபராதம் க்ருதவாந் அஜ்ஞாநாத் புருஷோத்தம ।
மதீய இதி தேவேஶ தத்ஸர்வம் க்ஷந்துமர்ஹஸி ॥ 16.

---

16. (பதவுரை) புருஷோத்தம தேவேஶ!—புருஷோத்தமனான எம்பெருமானே! **அஹம்**—அடியேன், **அஜ்ஞாநாத்**—அறிவில்லாமையினாலே, **அபராதம் க்ருதவாநிதியத்**—பிழை செய்தேனென்பது யாதொன்றுண்டோ, **தத்ஸர்வம்**—அதையெல்லாம், **மதீய இதி**—இவன் நம்மடியானன்றோ என்று திருவுள்ளம்பற்றி, **க்ஷந்தும் அர்ஹஸி**—க்ஷமிக்கக் கடவீர்.

இந்த ச்லோகத்தில் தேசகால விசேஷங்களை அநாதரித்துப் பகவத் கைங்கர்யமே முக்யமாக ப்ரார்த்திக்கப்படுவதால் இப்ரபந்நனுக்கு இங்கிருந்த காலம் முக்தி தரும் நகரேழு முதலான திவ்யதேசங்களில், 'ஊரிலேன் காணியில்லை' என்கிறபடியே வஸிக்க ஸௌகர்யமில்லாதபோது, 'தேனார் கமலத் திருமகள் நாதன்' என்கிறபடியே இவன் வஸிக்குமிடமே திவ்ய தேசமாகுமென்றும், 'காணியில்லை' என்கிற நியத கைங்கர்யம் கிடையாதபோது 'நாவினால் நவிற்றின்ப மெய்தினேன்' என்றும், 'பாவினின்னிசை பாடித்திரிவனே' என்கிறபடியே கீர்த்தநாதிகளான யதாசக்தி கைங்கர்யங்களும் அமையுமென்றும் சொன்னதாயிற்று.

**யத்யபராதம் க்ருதவாந அஜ்ஞாநாத்**—இப்படி, 'வாசித்தும் கேட்டும் வணங்கி வழிபட்டும் பூசித்தும் போக்கினேன் போது' என்கிறபடியே உபாயாநுஷ்டாநத்திற்குப் பிறகு இங்கிருந்த காலம் நியத கைங்கர்ய வித்தியை ப்ரார்த்தித்துப் பாம்போடொரு கூரையிலே பயின்றாப் போலே இத்தேஹேந்த்ரியங்களோடே கூட வஸிக்கும் அடியேனுக்கு ஸம்பாவிதமான அபசாரங்களைப் பொறுத்தருள வேணுமென்று ப்ரார்த்திக்கிறான்.

ப்ரபந்நன் புத்தி பூர்வமல்லாமல் செய்த பாபங்கள் இவனிடத்தில் ஸம்பந்திக்கிறதில்லையென்று 'தததிகமே' என்கிற ஸூத்ரத்தில் தீர்மானித்திருப்பதால், '**அஜ்ஞாநாத்யதிவா ஜ்ஞாநாதபராதேஷு ஸத்ஸ்வபி**' என்கிற விடத்தில் போலே இங்கு '**அஜ்ஞாநாத்**' என்பதற்கு புத்தி பூர்வமாகச் செய்திருக்கச் செய்தேயும் இது பாபமென்று அறியாததனால் செய்யப்பட்டது என்றபடி,

இங்கு இன்ன பாபத்தைப் பண்ணினேனென்று குறிப்பிட்டுச் சொல்லாதே '**யத்யபராதம்**' என்று சொல்லியிருப்பதால் முன்பு இது பாபமென்று அறிந்திருந்தால் அதைச் செய்தே இருக்கமாட்டேனென்று அபிப்ராயம்.



---

தானே செய்திருக்க, நீர் அறியாத பாபத்தை நாம் எப்படி அறிந்து க்ஷமித்தருளுவதென்ன; **புருஷோத்தம**—தேவரீர் புருஷோத்தமன் அன்றோ என்று பதில் சொல்லுகிறான். புருஷோத்தமன் இன்னானென்று சொல்லுமிடத்தில், '**யோ லோகத்ரயமாவிஶ்ய பிபர்த்யவ்யய ஈஶ்வர:**' '**ஈஶ்வர: ஸர்வபூதாநாம் ஹ்ருத்தேஶேऽர்ஜுந திஷ்டதி । ப்ராமயந் ஸர்வபூதாநி யந்த்ராரூடாநி மாயயா**' என்றும் சொல்லுகிறபடியே, ஸர்வ ப்ராணிகளுக்கும் அந்தர்யாமியாய் உள்ளே இருந்து நியமிக்கிற தேவரீர் அறியாததுண்டோ? **மதீய இதி**—இவன் நம்பக்கல் ப்ரியமுள்ள அடிமையென்று நினைத்துப் பொறுத்தருள வேணும். இதனால் அடிமையான அடியேனுக்குத் தேவரீருக்கு ப்ரியமானதொழிய, எனக்கென்றொரு ப்ரயோஜநமும் கார்யமுமில்லாமையினாலே, 'முன்பு இதையும் தேவரீர் உகப்பே ப்ரயோஜநமாக நினைத்துச் செய்தேன். விஷய ஸ்வபாவத்தினாலே அது பாபமாய் முடிந்த தத்தனை; ஆகையினாலடியேன் நெஞ்சில் செம்மை அழியாமையாலே அதைப் பொறுத்தருளுவதும் உசிதமன்றோ' என்று ப்ரார்த்தித்ததாயிற்று.

இப்படி, புத்தி பூர்வமாகப் பாபங்களை நினைத்தபடியெல்லாம் பண்ணுவதும், பின்பு ஒருக்கால் அவற்றைப் பொறுத்தருள வேண்டுமென்று சொல்வதும் உசிதமாகுமோ? அறிந்து பண்ணின அபசாரங்களையும் பொறுப்பாருண்டோவென்ன **தேவேஶ**—தேவர்களுக்கு ரக்ஷகனே என்கிறான்.

நரகாஸுரனால் நலிவுப்பட்ட தேவர்கள் தேவரீர் திருவடியின் கீழே விழுந்து தொழுது அழுததும் அவ்வாபத்தை நீக்கித் தந்த பின்பு ஒரு பூச்செடிக்காக அப்பொழுதே பூசலுக்குப் புறப்பட்டு வந்த தேவதைகளுடைய பத்தி பூர்வமான அபசாரங்களைப் பொறுத்தருளி அவர்களை மறுபடியும் ரக்ஷித்ததில்லையோ? இதற்குப் புறம்பே போய் ஒரு த்ருஷ்டாந்தம் தேடவேண்டுமோ? என்கிறான்.

(**தத்ஸர்வம்**) அவ்வபராதங்களைத் தான் ஒன்றிரண்டாகச் செய்தொழிந்தேனோ? '**ந நிந்திதம் கர்ம தத்ஸ்தி லோகே ஸஹஸ்ரஶோ யந்ந மயா வ்யதாயி**' என்கிறபடியே ஈமன்போலே வீழ்த்தமுக்கும் நாட்டிலுள்ள பாபமெல்லாம் ஆயிரந்தடவையாக அநுஷ்டித்துப்போந்ததை நினைத்து நினைத்து நமன்தமர் செய்யும் வேதனைக்கொடுங்கி நடுங்கின அடியேன் திறத்தில் சில பாபங்களைப் போக்கிச் சிலவற்றைச் சேஷமாக்கி வைக்கலாகுமோ? '**ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி**' என்கிற திருவாக்கும் அடியேன் விஷயத்தில் பொய்யே போகுமோ? என்கிறான். **க்ஷந்தும்**—பொறுத்தருளவும். இதற்காகத் தேவரீரின்னம் ஒரு தரம் நாட்டில் பிறந்து படாதன

அஹங்காரார்த்தகாமேஷு ப்ரீதிரத்யைவ நச்யது।
த்வாம் ப்ரபந்நஸ்ய மே தேவ வர்த்ததாம் ஸ்ரீமதி த்வயி॥ 17.

---

பட்டுத் திரியவேணுமோ? 'க்ஷிபாமி' என்கிற நின் நெஞ்சில் ஓர் நினைவை மாற்றுவது அது அடியேனுக்கு எண்ணிறந்த துயரத்தைத் தீர்த்து அந்தமிலா ஆநந்தத்தை அளிப்பதானால், இத்தனையும் செய்யலாகாதோ என்கிறான்.

அர்ஹஸி — யோக்யராகிறீர்; 'நஷ்டஸ்ய பகாராணாம் ஸதைவஸ்யாத்து வத்தயா' — என்றும் 'தோஷோ யத்யபி' என்றும் நாடெங்கும் நிறம் பெற்றிருக்கும் நின் நிகரில்லாப் புகழின் பெருமையைப் போக்கிக் கொள்ளாதிருக்க லாகாதோ? என்கிறான்.

ஆக இந்த ச்லோகத்தினால் 'உபாயஸம்பவே ஸத்ய: ப்ராயச்சித்தம் ஸமாசரேத்। ப்ராயச்சித்திரியம் ஸாத்ர யத்புந: சரணம் வ்ரஜேத்' என்று சொல்லுகிறபடியே ப்ரபந்நனுக்கும் புத்தி பூர்வோத்தராகத்துக்கு யதாசாஸ்த்ரம் ப்ராயச்சித்தம் பண்ணிக்கொள்ளவேணு மென்றும் அதற்குச் சக்தியில்லாதபோது ப்ராயச்சித்தார்த்தமாக ஒரு ப்ரபத்தி பண்ணவேண்டியது அவச்ய மென்றும் ஏற்படுவதால், ப்ரியதமையின் உடம்பில் அழுக்கானது பர்த்தாவுக்குப் போக்யமாக இருக்குமாப்போலே ப்ரபந்நன் செய்யும் பாபங்கள் ஈச்வரனுக்கு மிகவும் போக்யமாக விருக்குமென்று சிலர் சொல்லுவது ப்ரபந்நனிடத்தில் ஈச்வரனுடைய க்ருபாதிசயத்தைப் பற்றி அதிவாதமாக ஸ்தோத்ரம் பண்ணினபடி யென்று கண்டுகொள்வது. அன்றிக்கே, இதுவே சாஸ்த்ரார்த்தமானால் ஈச்வர ப்ரீதியை உத்தேசித்து முடிந்தவரையில் பாபங்களையே பண்ண வேண்டிவருமன்றோ?

ஆக, இந்த ச்லோகத்தில் 'க்ஷந்தும் அர்ஹஸி' என்கிற இத்தால் கீழ்ச்சொன்னபடியே ப்ரபந்நனுடைய புத்தி பூர்வகமாகச் செய்த பாபங்களுக்கு யதா சாஸ்த்ரம் ப்ராயச்சித்தம் பண்ணமுடியாதவன் ப்ராயச்சித்தமாக ப்ரபத்தியை அவச்யம் செய்தே தீரவேணு மென்கிற விஷயம் சொல்லப்பட்டதாயிற்று.

17. (ப—ரை) தேவ தேவ — ஸ்வாமிந்! த்வாம் — தேவரீரை, ப்ரபந்நஸ்ய — ஆச்ரயித்தவனான, மே — அடியேனுக்கு, அஹங்காரார்த்தகாமேஷு — கர்வமென்ன அர்த்தமென்ன காமமென்ன இவற்றிலுள்ள, ப்ரீதி: — ஆசையானது, அத்யைவ — இப்போதே, நச்யது — ஒழியக்கடவது. ஸ்ரீமதி — ஸ்ரிய: பதியான, த்வயி — தேவரீரிடத்தில், ப்ரீதி: — அன்பானது, வர்த்ததாம் — வளர்ந்தோங்குக.

## ஸ்ரீ வை. ஸி. ஸபை சந்தா வரவு

(வி பி மூலம் வரவு)

| | | | |
|---|---|---|---|
| ஸ்ரீ. உ. வே. ஜீ. வி. கிருஷ்ணஸாமி அய்யங்கார், சிதம்பரம் | 3 | 0 | 0 |
| ,, ஆராவமுதய்யங்கார், கபிஸ்தலம் | 3 | 0 | 0 |
| ,, டி. எஸ். சேஷாத்ரி அய்யங்கார், திட்டை | 3 | 0 | 0 |
| ,, உப்பில ஆராவமுதய்யங்கார், கும்பகோணம் | 3 | 0 | 0 |
| ,, வி. கே. ஸ்ரீநிவாஸ அய்யங்கார், கும்பகோணம் | 2 | 8 | 0 |
| ,, ஆர். செல்லம் அய்யங்கார், மதுரை | 8 | 0 | 0 |
| ,, எம். எஸ். கிருஷ்ணஸாமி அய்யங்கார், மேலப்பாளையம் | 3 | 0 | 0 |
| ,, பி. கே. பார்த்தஸாரதி அய்யங்கார், சென்னை | 3 | 0 | 0 |
| ,, பட்டாபிராம அய்யங்கார், ஜி. டி. சென்னை | 3 | 0 | 0 |
| ,, என். வி. ஸ்ரீநிவாஸாசாரியர், புரசைவாக்கம் | 3 | 0 | 0 |
| ,, வேதப்புலி எம். வி. ஸ்ரீநிவாஸ அய்யங்கார், ஸ்ரீரங்கம் | 3 | 0 | 0 |
| ,, ஜி. எ. கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார், கோபாலஸமுத்ரம் | 3 | 0 | 0 |
| ,, பி. டி. ஸ்ரீநிவாஸ அய்யங்கார், சாத்தூர் (விருதுநகர்) | 3 | 0 | 0 |
| ,, கிடாம்பி சேஷாச்சாரியார், பெஜவாடா | 3 | 0 | 0 |
| ,, எ. வி. கோபாலாச்சாரியார், திருச்சி | 5 | 0 | 0 |
| ,, வி. வி. அய்யங்கார், பம்பாய் | 3 | 0 | 0 |
| ,, சக்ரவர்த்தி விஜயராகவாச்சாரியார், பம்பாய் | 3 | 0 | 0 |
| ,, வீரராகவ அய்யங்கார், திருப்புனவாசல் | 3 | 0 | 0 |
| ,, கோபாலதேசிகாச்சாரியார், திருவட்டிபுரம் | 3 | 0 | 0 |
| ,, சோகத்தூர் துரைஸாமி அய்யங்கார், சோகத்தூர் | 3 | 0 | 0 |
| ,, கிடாம்பி ராமாநுஜாசார்யர், மோஹனூர் | 3 | 0 | 0 |
| ,, இ. எம். கோபாலகிருஷ்ண கோன், மதுரை | 3 | 0 | 0 |
| ,, வி. எஸ். ராகவாச்சாரியார், திருச்சி | 3 | 0 | 0 |
| ,, டி. பாஷ்யம் அய்யங்கார், கல்கத்தா | 3 | 0 | 0 |
| ,, கே. ஸ்ரீநிவாஸ அய்யங்கார், திண்டுக்கல் | 3 | 0 | 0 |
| ,, கோபாலாச்சாரியார், கோயில்பட்டி | 3 | 0 | 0 |
| ,, அளங்கனூர், டி. சுந்தரராஜ அய்யங்கார், தேவகோட்டை | 3 | 0 | 0 |
| ,, எ. திருமலை அய்யங்கார், ஸ்ரீ வைகுண்டம் | 3 | 0 | 0 |
| ,, ஸௌந்தர ராஜய்யங்கார், கீழசேவல்பட்டி | 3 | 0 | 0 |
| ,, எஸ். துரைஸ்வாமி அய்யங்கார், முனுக்கூர் | 3 | 0 | 0 |
| ,, ரத்னஸாமி அய்யங்கார், சிச்சிதாம்பூர் | 3 | 0 | 0 |
| ,, வீரராகவாச்சாரியார், திருவெழுந்தூர் | 3 | 0 | 0 |
| ,, எம். என். சேஷாசாரியார், திருவட்டிபுரம் | 3 | 0. | 0 |
| ,, ஆர். ஸௌந்தரராஜய்யங்கார், அமாடச்சி | 3 | 0 | 0 |
| ,, கோ. ஸ்ரீ. நரஸிம்மாசார்யார், மோஹனூர் | 3 | 0 | 0 |
| ,, தேசிகாசாரியர், சோட்பூர் | 3 | 0 | 0 |
| ,, ஏ. எஸ். ஆராவமுதய்யங்கார், புதுஅக்ரஹாரம் | 3 | 0 | 0 |

| | | | | |
|---|---|---|---|---|
| ஸ்ரீ. உ. வே. | கே. நரஸிம்மாசாரியர், திருச்சி | 3 | 0 | 0 |
| ,, | ரங்கஸ்வாமி அய்யங்கார், சென்னை. | 3 | 0 | 0 |
| ,, | பாபு ரெட்டியார், மாவடி | 3 | 0 | 0 |
| ,, | திருமலை தாதாசாரியர், வேளான்குப்பம் | 3 | 0 | 0 |
| ,, | கே. எஸ். ஸ்ரீநிவாஸாசாரியார், மோஹனூர் | 3 | 0 | 0 |
| ,, | எம். வி. கிருஷ்ணமாச்சாரியார், கரூர் | 3 | 0 | 0 |
| ,, | இ. எஸ். ஏகாம்பர அய்யர், ரங்கூன் | 3 | 0 | 0 |
| ,, | டி. எஸ். சேஷஅய்யங்கார், நாமக்கல் | 3 | 0 | 0 |
| ,, | எஸ். கே. ரங்கஸ்வாமி அய்யங்கார், மேலப்பாளையம் | 3 | 0 | 0 |
| ,, | டி. பி. சின்னகிருஷ்ண செட்டியார், சேலம் | 3 | 0 | 0 |
| ,, | வி. என். ஸ்ரீநிவாஸ சக்ரவர்த்தி, சேலம் | 3 | 0 | 0 |
| ,, | எஸ். பொன்னுசாமி அய்யங்கார், சேலம் | 3 | 0 | 0 |
| ,, | எஸ். குப்புஸாமி அய்யங்கார், பாபநாசம் | 3 | 0 | 0 |
| ,, | கர்னம் எஸ். கே. ரங்கஸ்வாமி அய்யங்கார், பெருந்தல்குடி | 3 | 0 | 0 |
| ,, | கே. எஸ். கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார், ஈரோடு | 3 | 0 | 0 |
| ,, | என். சடகோபாச்சாரியார், அரக்கோணம் | 3 | 0 | 0 |
| ,, | கே. எஸ். சடகோப அய்யங்கார், ஓமலூர் | 3 | 0 | 0 |
| ,, | வி. எஸ். ராமஸ்வாமி அய்யங்கார், மைலாப்பூர் | 3 | 0 | 0 |
| ,, | ஸ்ரீநிவாஸ தாதாசாரியர், ஈரோடு | 3 | 0 | 0 |
| ,, | நரஸிம்ம ராகவாச்சாரியர், மேல்நேமம் | 3 | 0 | 0 |
| ,, | என். சுப்ரமணியம், அரியலூர் | 3 | 0 | 0 |
| ,, | வி. எம். ஸ்ரீநிவாஸ அய்யங்கார், தேவகோட்டை | 3 | 0 | 0 |
| ,, | எஸ். கே. அண்ணாதுரை அய்யங்கார், கடலக்குடி | 3 | 0 | 0 |
| ,, | ஆர். ராஜகோபல அய்யங்கார், திருசசி | 3 | 0 | 0 |
| ,, | கே. ஸ்ரீநிவாஸ ஆய்யங்கார், பைக்காரா | 3 | 0 | 0 |
| ,, | ஸ்ரீநிவாஸாசாரியர், விக்ரவாண்டி | 3 | 0 | 0 |
| ,, | சேஷாசாரியார், கும்பகோணம் | 3 | 0 | 0 |
| ,, | ஆர். ஸ்ரீநிவாஸாசாரியார், ஊத்தங்கரை | 3 | 0 | 0 |
| ,, | இ. எஸ். ஸௌந்தர ராஜய்யங்கார், உத்தமபாளையம் | 3 | 0 | 0 |
| ,, | எ. ஆர். நரஸிம்ம அய்யங்கார், சேலம் | 3 | 0 | 0 |
| ,, | ஸ்ரீநிவாஸ அய்யங்கார், நீர்வளம் | 3 | 0 | 0 |
| ,, | மாடபூசி ராகவாச்சாரியர், ஒரகடம் | 3 | 0 | 0 |
| ,, | கே. ஸ்ரீநிவாஸ அய்யங்கார், உத்கமண்டலம் | 3 | 0 | 0 |
| ,, | மாடபூஷி சடகோபாச்சாரியார், ஒரகடம் | 3 | 0 | 0 |
| ,, | வி. ஜி. சேஷாத்ரி அய்யங்கார், தோண்டி | 3 | 0 | 0 |
| ,, | திருவேங்கடாசாரியார், தேவனூர்விளாகம் | 3 | 0 | 0 |
| ,, | இ. கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார், திருப்பிளாத்துறை | 3 | 0 | 0 |
| ,, | நல்லூர் ஸ்ரீநிவாஸாசாரியார், செய்யார் | 3 | 0 | 0 |
| ,, | எ. வெங்கடாசல முதலியார், திருவண்ணாமலை | 3 | 0 | 0 |
| ,, | எஸ். சக்ரபாணி அய்யங்கார், கணமவிசனூர் | 3 | 0 | 0 |



| | | | | |
|---|---|---|---|---|
| ஸ்ரீ. உ. வே. | வி. எ. ராமஸாமி நாயுடு, திருவண்ணாமலை | 3 | 0 | 0 |
| ,, | செல்லம் அய்யங்கார், கட்டப்பள்ளி | 3 | 0 | 0 |
| ,, | புதுப்பாளையம் ஸ்ரீநிவாஸ அய்யங்கார், மோஹனூர் | 3 | 0 | 0 |
| ,, | ஸௌந்தரராஜாசாரியார், புதுச்சிலம்பினி | 3 | 0 | 0 |
| ,, | வி. ஆர். ராஜகோபாலாசாரியார், ஆரணி | 3 | 0 | 0 |
| ,, | எஸ். ரங்கஸ்வாமி அய்டங்கார், திருத்துறைப்பூண்டி | 3 | 0 | 0 |
| ,, | ஸ்ரீசேஷாத்ரி அய்யங்கார், தில்லஸ்தானம் | 3 | 0 | 0 |
| ,, | பி. கே. ரங்கஸ்வாமி அய்யங்கார், மோஹனூர் | 3 | 0 | 0 |
| ,, | ஆர். பாஷ்யம் அய்யங்கார் ஜி. டி. சென்னை | 3 | 0 | 0 |
| ,, | ரங்கநாத முதலியார், இருமணம் | 3 | 0 | 0 |
| ,, | என். ஆர். ஸ்ரீநிவாஸ அய்யங்கார், ஸ்ரீரங்கம் | 3 | 0 | 0 |
| ,, | பி. எஸ். கிருஷ்ண அய்யங்கார், மதுரை | 3 | 0 | 0 |
| ,, | வி. ஜி. வரத அய்யங்கார், கோயமுத்தூர் | 3 | 0 | 0 |
| ,, | டி. ஜி. வெங்கடஸாமி நாயுடு, விளக்குடி | 3 | 0 | 0 |
| ,, | கே. வி. ரங்காசாரியார், வேலூர் | 3 | 0 | 0 |
| ,, | எஸ். வி. திருவேங்கடாசாரியார், ஸுமங்கிலி | 3 | 0 | 0 |
| ,, | வி. சேஷாச்சாரியார், பங்களூர் | 5 | 0 | 0 |
| ,, | டி. ஸ்ரீநிரஸவாசாரியார், மாம்பலம் | 3 | 0 | 0 |
| ,, | எம். எஸ். வரத அய்யங்கார், பரமக்குடி | 3 | 0 | 0 |
| ,, | டி. கோபாலபட்டர், ஸ்ரீரங்கம் | 3 | 0 | 0 |
| ,, | திவான்பகதூர், ராமபத்மநாயுடுகாரு, தொட்டப்ப நாய்க்கனூர் ஜமீந்தார் | 5 | 0 | 0 |
| ,, | எம். ஆர். திருமலை அய்யங்கார், புதூர் | 3 | 0 | 0 |
| ,, | ஆர். வேதாந்தாசாரியார், தேவகோட்டை | 3 | 0 | 0 |
| ,, | பி. எஸ். வேதாந்தாசாரியர், ஆரணி | 3 | 0 | 0 |
| ,, | வி. என். ராஜகோபால அய்யங்கார், மைலாப்பூர் | 3 | 0 | 0 |
| ,, | டி. நரஸிம்ம ராகவாச்சாரியார், திருவெண்ணெய் நல்லூர் | 3 | 0 | 0 |
| ,, | எ. நாராயண அய்யங்கார், மானம்புச்சாவடி | 3 | 0 | 0 |
| ,, | எ. சேஷாச்சாரியார், மவுண்டுரோடு சென்னை | 3 | 0 | 0 |
| ,, | ஜெ. வரதராஜ அய்யங்கார், திருநெல்வேலி | 3 | 0 | 0 |
| ,, | டி. கே. வெங்கடாசாரியார், திருநெல்வேலி | 3 | 0 | 0 |
| ,, | வி. சுந்தர அய்யர், ஜெம்ஷெட்பூர் | 3 | 0 | 0 |
| ,, | வி. கே. ஸ்ரீநிவாஸ அய்யங்கார், தர்மபுரி | 3 | 0 | 0 |
| ,, | வி. ராகவாச்சாரியார், ஸாப்தூர் | 3 | 0 | 0 |
| ,, | கே. சக்ரபாணி அய்யங்கார், கோயமுத்தூர் | 3 | 0 | 0 |
| ,, | வி. எஸ். குப்புஸாமி அய்யங்கார், பங்களூர் | 3 | 0 | 0 |
| ,, | அண்ணாதுரை அய்யங்கார், திருக்கோஷ்டியூர் | 3 | 0 | 0 |
| ,, | எம். எஸ். சேஷ அய்யங்கார், மதுரை | 3 | 0 | 0 |
| ,, | வேணுகோபாலதாஸ், திருநெல்வேலி | 3 | 0 | 0 |
| ,, | எ. எஸ் ராமானுஜ அய்யங்கார், அமர[illegible] | 3 | 0 | 0 |

| | | | | |
|---|---|---|---|---|
| ஸ்ரீ.உ.ப.வே. | லக்ஷ்மி அம்மாள், தேவனூர்விளாகம் | 3 | 0 | 0 |
| ,, | எல். ஸ்ரீநிவாஸ அப்பங்கார், கம்பம் | 3 | 0 | 0 |
| ,, | பிச்சு அப்யங்கார், ராமநாதபுரம் | 3 | 0 | 0 |
| ,, | பாஸ்கரம் ரங்கஸ்வாமி அய்யங்கார், பழைய சீவரம் | 3 | 0 | 0 |
| ,, | பி. எஸ். வேணுகோபால் நாயுடு, திருச்சூர் | 3 | 0 | 0 |
| ,, | ஜி. கே. ரங்கஸ்வாமி அய்யங்கார், மவுண்டுரோடு சென்னை | 3 | 0 | 0 |

(மணியார்டர் மூலம்)

| | | | | |
|---|---|---|---|---|
| ,, | வி. ஆர். ராஜகோபாலாச்சாரியர், தஞ்சை | 3 | 0 | 0 |
| ,, | வி ரங்கஸ்வாமி அய்யங்கார், கரூர் | 5 | 0 | 0 |
| ,, | டி. டி. ஸ்ரீநிவாஸ அய்யங்கார், ராமநாதபுரம் | 3 | 0 | 0 |
| ,, | கே. வி. திருவேங்கடத்தய்யங்கார், பம்பாய் | 3 | 0 | 0 |
| ,, | ஆர். கோபாலஸ்வாமி அய்யங்கார், வடமலை | 3 | 12 | 0 |
| ,, | வி. வி. ஸ்ரீநிவாஸ அய்யங்கார், திருநெல்வேலி | 3 | 0 | 0 |
| ,, | டி. முத்துஸாமி அய்யங்கார், சிறுவாலை | 3 | 0 | 0 |
| ,, | பி. எம். சேஷாசாரியார், வாலாஜாபாத் | 3 | 0 | 0 |
| ,, | என். ராகவாச்சாரியார் திருவல்லிக்கேணி | 3 | 0 | 0 |
| ,, | டி. நரஸிம்மராகவ அய்யங்கார் ,, | 3 | 0 | 0 |
| ,, | ஆர். லக்ஷ்மண அய்யங்கார் ,, | 3 | 0 | 0 |
| ,, | இன்னம்பூர் கோபாலஸ்வாமி அய்யங்கார் திருவல்லிக்கேணி | 3 | 8 | 0 |
| ,, | பி. எ. ஸ்ரீநிவாஸாசாரியார், திருவல்லிக்கேணி | 5 | 0 | 0 |
| ,, | டி. ரங்கஸ்வாமி அய்யங்கார், தின்னனூர் | 2 | 0 | 0 |
| ,, | ஆர். கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார், தின்னனூர் | 3 | 0 | 0 |
| ,, | ரகுநாதாசாரியார், தின்னனூர் | 3 | 0 | 0 |
| ,, | வி. ஆர். வீரராகவாச்சாரியார், சேலம் | 3 | 0 | 0 |
| ,, | கே. ஸ்ரீநிவாஸராகவாச்சார்யர், புவனகிரி உடையூர் | 3 | 0 | 0 |
| ,, | வி. ராஜகோபாலாச்சாரியர், சித்தூர் | 3 | 0 | 0 |
| ,, | கே. ஸ்ரீநிவாஸராகவ அய்யங்கார் மாம்பலம் | 3 | 0 | 0 |
| ,, | எம். கே. ஸ்ரீநிவாஸ அய்யங்கார், பங்களூர் | 3 | 0 | 0 |
| ,, | வி. வெங்கட கிருஷ்ணமாச்சாரியர், திருவல்லிக்கேணி | 1 | 8 | 0 |
| ,, | பி. விஜயரத்னபிள்ளை, ஊட்டி | 3 | 0 | 0 |
| ,, | வி. ஸ்ரீநிவாஸ அப்பங்கார், பந்தல்குடி | 2 | 0 | 0 |
| ,, | டி. ஆர். ராஜகோபால அய்யங்கார், திருவல்லிக்கேணி | 3 | 0 | 0 |
| ,, | கே. விஜயராகவாச்சாரியார், ,, | 3 | 0 | 0 |
| ,, | கே. சேஷாசாரியார் ,, | 3 | 0 | 0 |
| ,, | எ. கோவிந்தாசார்யர் ,, | 3 | 0 | 0 |
| ,, | வி. தேசிகாசாரியர், பார்க்டவுன் | 3 | 0 | 0 |


---

ஆவணக்காப்பக
186785
சென்னை-600 008.

# உம்மிடி ராமய்யா செட்டி குருசாமி செட்டி கம்பெனி

## நகை வர்த்தகர்கள்.





**தொழிற்சாலை.**

62, கோவிந்தப்ப நாய்க்கன் தெரு, சென்னை

**காட்சி அறை.**

25, சைனபஜார் ரோட், மதராஸ்.

## நம்பிக்கை.

நகைகள் நாணயமாகவும், நம்பிக்கையாகவும் செய்து கொடுக்கப்படும். தேவையில்லாத நகைகள் 8 நாட்களுக்குட்பட்டுக் கொண்டுவந்தால் பூராப் பணமும் திருப்பிக் கொடுக்கப்படும். சவரன் பொன்னுக்கும் சீமை வெள்ளிக்கும் கியாரண்டி கொடுக்கப்படும். ஒரு முறை எங்களிடம் வாங்கியவர்களுக்கு அதன் உண்மை தெரியவரும்.



காட்லாக்குக்கு எழுதுங்கள்.



உங்கள் ஆரோக்யத்திற்குற்ற தோழன்

# அமிருதாஞ்சனம்.

கீழ்க்கண்ட வியாதிகளுக்கு ஆச்சர்ய நிவாரணி.




| | |
|---|---|
| தலைவலி | இருமல் |
| நரம்புவலி | ஜலிப்பு |
| முதுகுவலி | நெருப்புக்காயம் |
| இடுப்புவலி | காயங்கள் |
| கீல்வாயுவு | சுளுக்குகள் |

மற்றுமுள்ள வலிகளுக்கும் நோவுகளுக்கும்.

## அமிருதாஞ்சனம் டிபோ,

பம்பாய்      மதராஸ்.



இது சென்னை சுதேசமித்திரன் பிராஞ்சு அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டு,
சென்னை ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ஸபை கார்யதர்சியால் வெளியிடப்படுவது.